பக்கங்கள்:-பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி 06 | செவ்வாய்க்கிழமை | (23.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 278

# பரிஸில் தயாரித்த திட்டவரைபை அயர்லாந்திலுள்ள புலிகளின் சட்டவல்லுநர்கள் ஆராய்வர்!

## சு.ப.தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கை அரசிடம் சமர்ப்பிப்பதற்கென தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்டவல்லுநர்கள் பரிஸில் கூடித் தயாரித்த இடைக்கால நிர்வாக சபை திட்டவரைவை அயர்லாந்தில் உள்ள விடுதலைப் புலிகளின் சட்ட வல்லுநர்கள் மீளாய்வு செய்த பின்னரே திட்டவரைபு நோர்வே ஊடாக இலங்கை அரசிடம் கையளிக்கப்படும். இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அறிவித்துள்ளார்.

(10ம்பக்கம் பார்க்க)



சர்வதேச நிதிநிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்றைய தினம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை சந்தித்துப் பேசிய போது எடுக்கப்பட்ட படம்.

**அன்பு மாணவர்களே!**
**உள்ளே**
**க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான தமிழ் மொழியும் இலக்கியமும் மாதிரி வினாத்தாள்**

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

## சுகாதாரக் கடமைகளில் படையினரை ஈடுபடுத்த முயற்சி

(கொழும்பு)

யாழ்.போதனா வைத்திய சாலையில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சுகாதார ஊழியர்களின் கடமைகளை மேற் கொள்வதற்கு இராணுவத்தினரை ஈடுபடுத்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக நோயாளர்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கில், முதற் கட்டமாக 15 இராணுவத்தினர் இச் சேவையில் ஈடு படுத்தப்படவுள்ளனர்.

மேலும் தேவைப்படும் பட்சத்தில் இராணுவத்தினர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.இதேவேளை தமது வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டு கடமைக்குச் செல்வதற்கு வடக்குக் கிழக்கிலுள்ள சுகாதார ஊழியர்கள் முன்வந்துள்ள போதும் சங்கத்தின் பயமுறுத்தல் காரணமாக அவர்கள் வேலைக்குத் திரும்ப அஞ்சுகின்றனர் என சுகாதார அமைச்சர் தயாரட்ண தெரிவித்துள்ளார்.

ஊழியர்கள் வேலைக்குத் திரும்பும் பட்சத்தில் உரிய பாதுகாப்பு வழங்கப்படுமெனவும் நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் கூறினார்.(த)

## யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம்

### வலம்புரியின் செய்தியை சாடுகிறார் து.வைத்திலிங்கம்

(யாழ்ப்பாணம்)

'கூச்சல்-குழப்பம்-அமளிதுமளி மத்தியில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கூடியது' என வலம்புரியில் 22.09.2003 அன்று வெளியான செய்தி முற்றுமுழுதாகப் பிழையான செய்தி எனத் தெரிவித்து சங்கத்தின் புதிய தலைவர் திரு.து.வைத்திலிங்கம் அவர்கள் அவசர கடிதமொன்றை நேற்று வலம்புரிக்கு அனுப்பி வைத்துள்ளார். அக் கடிதத்தின் முழுவிபரமும் வருமாறு;

*ஆசிரியர்,*
*'வலம்புரி'*
*யாழ்ப்பாணம்.*

*மிக்க அன்புடையீர்,*

யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் (நேற்று) 21.09.2003 அன்று யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடந்தது. அது தொடர்பாக தங்கள் பத்திரிகையான 'வலம்புரி'யில் ஒரு செய்தி பிரசுரமாகியுள்ளது. அதில் முற்றும்முழுதாக பிழையான செய்திகளைக் கொண்டுள்ளது என்பதை மிக மனவருத்தத் துடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

1. கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு.இ.மகேந்திரன் திடீர் என்று தலைவராக நியமிக்கப்பட்டார் என்று பிரசுரித்துள்ளீர்கள், அது பிழையானது. கடந்த 48 ஆண்டு காலமாக யாழ்.இந்து பழைய மாணவர் சங்கத்தில் ஆயுள் கால அங்கத்தவராகவும், பல பொறுப்புக்களை வகித்தவருமான திரு.இ.மகேந்திரன் 1999ம் ஆண்டு முதல் இன்று வரை உப தலைவர்களுள் ஒருவராகப் பதவி வகித்து வருகிறார். தலைவர் தவிர்க்க முடியாத காரணத்தினால் வருகை புரியாத இடத்தில், உப தலைவராகப் பதவி வகிக்கும் திரு.இ.மகேந்திரன் கூட்டங்களுக்கு தலைமை வகிப்பதில் என்ன பிழை? அவர் ஒன்றும் நியமிக்கப்பட்ட தலைவர் அல்ல!. இப்படிப்பட்ட செய்தியை பிரசுரிப்பதன் மூலம் உண்மையில் அவரின் நல்ல பெயருககு ஒரு களங்கம் ஏற்படுத்த முயன்றுள்ளீர்கள். இது பெரும் கவலைக்குரியது.

2. ஆண்டுக் கணக்கறிக்கைக் கணக்குகளை தணிக்கை செய்த நிறுவனம ஆங்கிலத்தில் தான் தயார் செய்து சமர்ப்பித்தது. நேரமின்மையால் அவற்றைத் தமிழில் மொழி பெயர்க்க அவகாசம் கிட்டவில்லை. இதனைச் செயலாளர் சபையினருக்கு விளங்கப்படுத்திய

(02ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால் சில அதிகாரங்களை வழங்கத் தயார்

### ஜனாதிபதி சந்திரிகா அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு நாட்டை இரண்டாகப் பிரிக்க மாட்டோம் என்ற ஒப்பந்தத்தில் கைச் சாத்திடும் பட்சத்தில்,

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குவது குறித்து ஆராயப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்றுமுன்தினம் பண்டாரகமையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் தெரிவித்தார்.

அக்கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில்,புலிகள் எழுத்து மூலம் இவ் உறுதியை வழங்க வேண்டும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு பல அதிகாரங்கள் தற்போது வழங்கப் பட்டுள்ளன.

தமிழீழ காவல்துறை, நீதிமன்றம், வங்கி என்பனவற்றை அவர்கள் அப்பகுதிகளில் அமைத்துள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ.சு.கட்சி-ஜே.வி.பி கூட்டு முயற்சி மீண்டும் தொடர வாய்ப்பு உண்டு

### இரு கட்சிகளும் இணைந்து அறிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் தேவை ஏற்படும் போது மீண்டும் கூட்டமைப்பு சம்பந்தமான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் வகையிலேயே கூட்டு முயற்சிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக இரு கட்சிகளும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளன.

அநதக் கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் கூட்டமைப்பிற்கான பேச்சுவார்த்தையை இடை நிறுத்தி இருப்பதை ஐக்கிய தேசியக் கட்சி தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயல்கிறது. இச் சூழ் நிலையில் மக்கள் சிக்காமல் இருப்பதற்காகவே இரு கட்சிகளும் இணைந்து இந்த அறிக்கையை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

**சாந்தி பெற இறைவனுக்கு நன்றி சொல்வோம்**

மொழி வளமும் கலாசார வளமும சிறப்புற சமய ஆசாரங்களை முதன் மைப்படுத்தி வழிகாட்ட நவராத்திரி விழாக்காலத்தில் சகலரும் தொழிற் படுக.- இலங்கை இந்து இளைஞர் பேரவை திருகோணமலை. (7482)


## பஸ் நிலையம் திறந்து வைப்பு

(சுதுமலை)

சுதுமலை அம்மன் கோவில் பகுதியில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று புதிதாகக் கட்டப்பட்டு கடந்த வாரம் மாவட்ட ஆளுநர் லயன் டாக்டர் ரொகான் பெரேராவால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(252)


## நாடகம் பேச்சுப் போட்டிகள்

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு நடாத்தும் கலாசார நிகழ்வு போட்டிகளில் நாடகம்,பேச்சுப் போட்டிகள் இன்று (23.09.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி முதல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி (பட்டப் படிப்புகள் அலகு) மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

மேலதிக விபரங்க ளுக்கு
தொலைபேசி இல - 222 5657

[C/6703]



## மருண்டவன் கண்ணுக்கு....



## யாழ்.ஆஸ்பத்திரியின் அவசர பணிகளில் பரியோவான் படைப்பிரிவுத் தொண்டர்கள்

(யாழ்ப்பாணம்)

சுகாதார சேவை ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பாதிப்படைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பணிகளை ஓரளவுக்காவது திருப்திகரமாக மேற்கொள்ளும் வகையில், புனித பரியோவான் படைப்பிரிவினர் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



மனிதாபிமான அடிப்படையில் இங்கு பணியாற்றப் போவதாக புனித பரியோவான் படைப்பிரிவு விடுத்த கோரிக்கைக்கு, ஆஸ்பத்திரி நிர்வாகம் சாதகமாகப் பதிலளித்ததையடுத்து அங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை முதல் இவர்கள் பணியிலீடுபட்டு வருகின்றனர்.

இதனையடுத்து வைத்தியசாலையின் அவசர சேவைகள் ஓரளவு திருப்திகரமாக இடம்பெற்று வருகின்றன.

தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும், தேவைகருதி ஆட்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

இதே வேளை, கடந்த 17ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஆரம்பமான சுகாதார ஊழியர் போராட்டம் முடிவேதும் எட்டப்படாத நிலையில் நேற்று 6வது நாளாகவும் தொடர்ந்தது. (உ-4)

## மின் திட்டத்துக்கு 100 கோடி நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

மத்திய மாகாண மின் விநியோகத் திட்டத்துக்கென 100 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி 73 கோடி 80 இலட்சம் ரூபாவையும்,சீன அரசாங்கம் 26 கோடி 76இலட்சம் ரூபாவையும் வழங்கவுள்ளன.

இந் நிதிமூலம் மாத்தளை, நுவரேலியா, அனுராதபுரம், பொலநறுவை, மாத்தறை, பதுளை ஆகிய மாவட்டங்களில் 232 மின்சாரத் திட்டங்கள் அமைக்கப்படவுள்ளன.

சுமார் 32 ஆயிரம் குடும்பங்கள் பயன் அடையும் இத்திட்டம் இம் மாத இறுதியில் ஆரம்பிக்கப் படவுள்ளது. (தி-60)

## உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு

வலிகிழக்கு பிரதேச சபையின் உளளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் வலி. கிழக்கு பிரதேச சபைத் செயலாளர் க.வெங்கடாசலம் தலைமையில் நடைபெற வுள்ளது. இந் நிகழ்வுக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, கோப்பாய்பிரதேச செயலாளர் க.கேதீஸ்வரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (5)

## யாழ்.இந்துக் கல்லூரியின்.......

சமயம் சபையினர் அதை ஏற்றுக் கொண்டனர். கூட்டம் மிக மிக அமைதியாகத்தான் நடந்தேறியது.

கணக்குகளை தணிக்கை செய்த நிறுவனம் விலை போய் விட்டது என்று யாரும் எச்சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. கூட்டத்தில் சமுக மளித்தோர் யாவரும் இதை நன்கறிவர். கூறாத ஒரு வார்த்தையை கூறியுள்ளதாகத் தங்கள் செய்தி கூறுகின்றது.

உண்மையில் இக்கணக்கு தணிக்கை நிறுவனம் மிகப் பழமையானது. அப்படிப்பட்ட ஒரு நிறுவனத்திற்குத் தங்கள் செய்தி மூலம் இப்படி ஒரு இழுக்கை நீங்கள் தேடிக் கொடுத்து விட்டீர்களே என்பது மிக மிக கவலைப்படக் கூடிய ஒரு விடயமாகும்.

கண்ணியம் நிறைந்த தங்கள் பத்திரிகை இவ்வாறு ஒரு தவறைச் செய்ததுபற்றி நான் மிகவும் கவலையும் வேதனையும் அடைகிறேன். தயவு செய்து இவ் விளக்கத்தைப் பூரணமாக தங்கள் மேலான பத்திரிகையில் பிரசுரித்து உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

து.வைத்திலிங்கம்
(தலைவர்)

### ஆசிரியரின் பகிரங்கப் பதில்

**திரு. து. வைத்திலிங்கம்**
**தலைவர்,**
**யாழ். இந்துக் கல்லூரி,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**

அன்புசால் பெருந்தகையீர்!
வணக்கம்!

ஈழத் தமிழ் மக்களின் கலா பீடமாக விளங்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக தாங்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்து மகிழ்கிறோம். மேலும் தாங்கள் நேற்றைய தினம் (22.09.2003) அனுப்பிய அவசர கடிதம் கிடைத்தது. ஆற்றொணாத அதிர்ச்சி தூக்கிவாரிப் போட்டது. இருந்தாலும் அக்கடிதத்தை தாஙகள் சுயமாக எழுதியிருக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. தங்களுக்கு இருக்கக் கூடிய அழுத்தம் இத்தகையதொரு கடிதத்தை எழுத வைத்திருக்கிறது.

இவ்வழுத்தம் இக் கடிதத்தோடு ஆரம்பித்திருக்கிறது. அதன் முடிவு உங்களின் பதவிக் காலம் வரை நீடிக்கும் என்பதை தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். இவ் ஞாபகமூட்டல் தங்கள் மீது யாம் கொண்ட அன்பின் வெளிப்பாடு. மறந்தும் தவறாக எண்ணிவிடாதீர்கள்.

ஐயா,

தாங்கள் சிறந்த நிர்வாகி, நாடறிந்த எழுத்தாளர், ஆனால் என்ன செய்வது, பாதீனியத்தின் பரம்பல் உங்கள் உள்ளக் கமலத்திலும் தொற்றிவிட்டது. புகழ்பூத்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக தாங்கள் நியமனம் பெற்றிருக்கிறீர்கள் என்ற செய்தியை அறிந்ததும். இராமனுக்கு முடிசூட்டும் செய்தி கேட்டு ஆனந்தம் அடைந்த அயோத்தி மாந்தர் போல் யாமும் பேருவகை யுற்றோம். ஆனால்... நேற்றைய தினம் நீங்கள் அனுப்பிய கடிதம் கண்டோம். இராமன் காடேகிறார் என்ற செய்தியோடு புலம்பிய அயோத்திக் குடிகளின் நிலை எமக்கும் ஏற்பட்டது.

தாங்கள் எழுதிய கடிதத்தில் காணப்பட்ட வன்மையான சொற்கள் எமக்கு மனவேதனையைத் தருகிறது. நேற்று முன்தினம் வலம்புரியில் வெளியான 'கூச்சல்-குழப்பம்-அமளிதுமளி மத்தியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கூடியது' என்ற செய்தி முற்று முழுதாகப் பிழையெனக் கூறியிருந்தீர்கள்.

நேரடியாகப் பார்க்கக் கூடிய சம்பவம்-தாங்களும் நேரில் இருந்து அவதானித்த நிகழ்வு அதனையே முற்றுமுழுதாகப் பிழையெனக் கூறியிருப்பது, இறைவா! இந்த உலகமே இதுதானா உண்மைகள் இப்படித்தான் உறங்கிப்போகுமா? என்ற உணர்வை ஒரு கணம் எமக்கு ஏற்படுத்தியது.இருந்தும் தாங்கள் குறிப்பிட்டுக் கூறிய விடயங்களுக்கு விளக்கம் தருவது எமது கடமை. அவ் வகையில் தங்களது முதலாவது குற்றச்சாட்டில்,

* திரு.இ.மகேந்திரன் அவர்களின் நல்ல பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்த முயன்றுள்ளீர்கள் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். உண்மையில் தங்கள் கடிதத்தின் மூலம் தான் திரு.இ.மகேந்திரனின் நல்ல பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டுள்ளது. இதனை தாங்கள் ஆறஅமர இருந்து சிந்திப்பீர்களாயின் அதன் உண்மைகளை உணர்ந்து கொள்ள முடியும். மாறாக இப்படித்தான் நீங்கள் கடிதம் எழுத வேண்டும் என்ற அழுத்தத்தோடு சிந்திப்பீர்களாயின் அந்த உண்மையை நீங்கள புரிந்து கொள்வது கடினமே.

திரு.இ.மகேந்திரன் அவர்கள் சிறந்த ஆசான்-நல்ல அதிபர். இடம் பெயர்ந்த இக்கட்டான சூழ்நிலையிலும் யாழ்.இந்துக் கல்லூரியை இயக்கிய பெருமை அவருக்குண்டு. இதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அவர் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் என்பதிலும் எமக்கு எந்தக் கருத்து முரண்பாடும் கிடையாது. அவர் பிரதித் தலைவராக திடீரென நியமிக்கப்பட்டார் என சபையில் தெரிவிக்கப்பட்ட கருத்தே செயதியாக பிரசுரிக்கப்பட்டது. இதற்கான விளக்கம் சங்கத்தின் செயலாளரால் கூறப்பட்டது. அதனையும் செய்தியில் தெரிவித்திருந்தோம். உப தலைவருக்கும் பிரதித் தலைவருக்கும் வித்தியாசம் உண்டு. இதனை எழுத்தாளராகிய தாங்கள் புரிந்து கொள்வதில் கடினமிருக்க முடியாது. உப தலைவராக இருப்பவர் கூட்டத்திற்கு தலைமை தாங்கும் போது அவர் தலைவர் என்ற பதவியோடு தலைமை வகிக்க முடியாது. பிரதித் தலைவராகவே பதவி வகிக்க முடியும். அவ்வகையில் 'பிரதித் தலைவர்' என்ற பதமே திடீரென நியமிக்கப்பட்டது என செய்தியில் கூறப்பட்டது. அது உண்மையும் கூட.

கூட்டம் கூடுவதற்கு முதல் நாள் அதாவது 20-ந் திகதி திடீரெனக் கூடிய ஆட்சிக் குழு திரு.இ.மகேந்திரன் அவர்களைப் பிரதித் தலைவராகத் தெரிவு செய்தது. இது திடீர் நியமனம் இல்லையா? இத்தகவல் எந்த வகையில் திரு.இ.மகேந்திரன் அவர்களின் நல்ல பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் என்பது எமக்குப் புரியாமலேயே உள்ளது.

மேலும் தங்களின் இரண்டாவது குற்றச்சாட்டில் கணக்காய்வு நிறுவனத்தையும் எம்மையும் நன்றாகவே இழுத்து முடிச்சுப் போட்டிருக்கிறீர்கள். ஆனால் இத்தகைய முடிச்சை நீங்கள் ஒருபோதும் போடமாட்டீர்கள். அத்தகைய குறுக்கு மூளை உங்கள் நேர்மைக்கு முன் நிலை பெறாது. இது கடந்த காலங்களில் முடிச்சுப்போட்ட கரங்களின் மற்றொரு சன்மானம் என்பது எமக்கு நன்கு தெரியும்.இருந்தும் தாங்கள் குறிப்பிட்ட ஆங்கிலம்-மொழிபெயர்ப்பு - நேரமின்மை இவை யாழ்.இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களை அறிவிலிகளாக்க முயற்சிக்கும் நாடகம். யாழ்ப்பாணத்துப் புத்தி ஜீவிகளை பேய்ப்பட்டம் கட்டுவிக்கும் திருகுதாளம். கூட்டம் கூட்டப்படுவதற்காக விடுக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தல், அதற்கு இடைப்பட்ட கால இடைவெளி அவற்றையெல்லாம் மறைத்து-மறந்து நேரமின்மையெனக் கூறப்படுவதும், தமிழ் மொழிபெயர்ப்புத் தேவையாயின் எம்மோடு தொடர்பு கொள்ளலாம் என அறிவிப்பதும், நேர்மையின் வார்த்தைகள் அல்ல. இவை வெறும் பூச்சாண்டிப் புலுடாக்கள்-உருட்டுப் புரட்டுக்களின் புதைகுழிகள்-இதனை நீங்களுமா நம்பினீர்கள்.ஆ... நெஞ்சு பொறுக்கவில்லை.

மேலாக கூட்டம் அமைதியாக நடைபெற்றதாக கூறியிருந்தீர்கள். ஐயா, மன்னித்தருளுக! கல்லூரியின் மானம் காத்து அமளி துமளிச் செய்தியில் தணிக்கை செய்தது எம்பிழை. ஒருவர் கெட்ட வார்த்தை பேசியவாறு சபையில் இருந்தவரைத் தாக்க முற்பட வில்லையா? கூக்குரல், குழப்பங்கள் ஏற்பட வில்லையா? தலைவர் எங்கே என்று கேட்க அவரைக் காண வில்லை எனக் கூற நடந்தது என்ன? இதுவா அமைதி? கல்லூரியின் பழைய மாணவர்கள் வெளியில் நிற்க, கூட்டத்தின் நுழைவாயிலில் தடைபோடப்பட்டது! இதுவா அமைதியின் அடையாளம். தங்கள் குறிப்பு வேதனையைத் தருகிறது, ஐயா, கணக்கறிக்கை பற்றி எவரும் சொல்லாத செய்தியைப் பிரசுரித்திருப்பதாகத் தாங்கள் எழுதியுள்ளீர்கள். ஆனால் உண்மை அதுவன்று. பலர் பலவாறு சொல்லியதை நாம் பிரசுரிக்கவில்லை என்பதே உண்மை.

உண்மையை உரைக்க வலம்புரி ஒருபோதும் தளர்ந்ததில்லை-தளரப் போவதுமில்லை. அது குருஷேத்திரத்தில் தர்மத்தின் மலர்வுக்காக ஒலித்த சங்கொலி என்பதை தங்களின் மேலான சிந்தைக்கு சமர்ப்பித்து எமது பதிலை நிறைவு செய்கிறோம்.

பிரதம ஆசிரியர்

# அணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க எண்ணம்

2007ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகளில் பங்குபற்றும் நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க சர்வதேச கிரிக்கெற் பேரவை தீர்மானித்துள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று முடிந்த 2003ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகளில் 14 நாடுகளின் அணிகள் பங்குபற்றின. இந்த எண்ணிக்கையை 2007 ஆம் ஆண்டு மேலும் இரண்டால் அதிகரிக்க எண்ணியுள்ளதாக சர்வதேச கிரிக்கெற் பேரவையின பிரதம நிறைவேற்று அதிகாரி மெக்கல ஸ்வீட் தெரிவித்துள்ளார்.

டெஸ்போட்டிகளில் கலநது கொள்ளாத நாடுகளுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காகவும், கிரிக்கெற் துறையை ஊக்குவிப்பதற்காகவுமே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, டெஸ்ட் அந்தஸ்துப்பெறாத நாடுகள் கடந்த உலகக கிண்ணப்போட்டிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டதால் போட்டி அட்டவணைகள் அதிகம் நீண்டு சென்றதாகவும், இவ் நாடுகளுடனான போட்டிகள் விறு விறுப்பாக அமையாமல் இருந்ததாகவும், போட்டி முடிவுகள்கூட மிக குறைவான தரமுடையதாக காணப்பட்டதாகவும் கிரிக்கெற் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

2007ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெற் போட்டிகளில் 16அணிகள் கலந்து கொள்ள விருப்பதால் நான்கு அணிகள்கொண்ட நான்கு குழுக்களாகப் பிரித்து முதல் சுற்று லீக்போட்டிகள் நடாத்தப்பட வேண்டுமென சர்வதேச கிரிக்கெற் பேரவைத் தலைவர் இசான்மணி தெரிவித்துள்ளார். (உ-68)

# கொங் கொங்கிடம் தோற்றது இலங்கை கால்பந்தாட்ட அணி

## ரசிகர்கள் ஏமாற்றம்

23 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண கால்பந்தாட்ட தகுதிகாண் போட்டியின் முதலாவது சுற்றின் இரண்டாவது போட்டியிலும் இலங்கை அணி கொங்கொங் அணியிடம் 2:0 என்ற கோல் கணக்கில் தோற்றுப்போனது. இதன்மூலம் இலங்கை அணி தகுதிகாண் இரண்டாம் சுற்று போட்டிக்கு தெரிவாகாமல் வெளியேறியுள்ளது.

கொங்கொங்கில் நடைபெற்ற இவ்விரு அணிகளுக்குமிடையிலான முதலாவது சுற்று தகுதிகாண முதல் போட்டியில் இலங்கை அணி 1:0 என்ற கோல்கள் அடிப்படையில் கொங்கொங்கிடம் ஏற்கனவே தோற்றுப் போனமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன்பின் முதல் சுற்றின் இரண்டாவது போட்டி கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டியிலேயே இலங்கை அணி 2:0என்ற கோல்கள் அடிப்படையில் மீண்டும் கொஙகொங்கிடம் தோற்று வெளியேறியுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற இப்போட்டியின் வெற்றிவாய்ப்பு இலங்கைக்குக் கிட்டுமென எதிர்பார்க்கப்பட்டபோதும், இலங்கை அணி தோலவியடைந்ததால் இலங்கை கால்பந்தாட்ட ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

முதலாவது சுற்றின் இரண்டு போட்டிகளிலும் மொத்தமாக 3:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றுள்ள கொங்கொங் அணி இரண்டாம் சுற்றிற்கு தகுதி பெற்றுள்ளது.

(உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

# இங்கிலாந்து அணியின் சிறந்த தலைவர் நசார் உஷைன்

## கருத்துக்கணிப்பில் தெரிவு

இங்கிலாந்தின் முன்னாள் கிரிக்கெற் அணித்தலைவர் மைக்தியலிககுப் பின்னர் நசார் உஷைனே இங்கிலாந்தின் அதிசிறந்த கிரிக்கெற் அணித்தலைவர்என இங்கிலாந்தின் விஸ்ரன் சஞ்சிகை நடாத்திய கருத்துக்கணிப்பு மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த யூலை மாதம் நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கெதிரான கிரிக்கெற் போட்டிகளில் இங்கிலாந்து அணி சரியாக பிரகாசிக்கத் தவறிய போதும் நசார் உஷைன் இங்கிலாந்து சார்பாக திறமையை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தொடரில் முதலாவது போட்டியின் போது உஷைன் அணித்தலைவராக விளையாடியிருந்த போதிலும் அதன்பின்னர் இவர் தனது தலைமைப்பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.

மைக்தியலிக்குப் பின்னர் இங்கிலாந்து அணிக்கு தலைமைப் பதவியை வகித்த கொலின் ஹைத்தி, ரொனிகிரேக், மைக்கெற்றிங், கிரகெம்கூச், மைக்டெனிஸ், டேவிட்கவர், மைக்கல் அதட்டன், அலெக்ஸ்ஸ்ருவேட் ஆகியோருடன் ஒப்பிடுகையில் நசார் உஷைன் மிகத் திறமையாக தலைமைப் பதவியேற்று இங்கிலாந்து அணியை வழிநடத்தியதாகவும் விஸ்ரன் சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது.

பீற்றர் மேரே, இலிங்ஸ்வேத், கைக்தியலி ஆகிய இங்கிலாந்தின் முன்னாள் அணித்தலைவர்களே விஸ்ரன் சஞ்சிகையின் இங்கிலாந்தின் சிறந்த கிரிக்கெற் தலைவர்கள் தரப்படுத்தலில் நசார் உஷைனை விட முன்னர் முன்னிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-68)

# பங்களாதேஷ் அணியை பாகிஸ்தான் வென்றது

பாகிஸ்தானின் ராவில்பிண்டியில் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கெதிரான 4வது சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் பாகிஸ்தான் அணி 5விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

5 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில் நான்கு போட்டிகளிலும் வெற்றிபெற்று பாகிஸ்தான் 4:0என்ற புள்ளிகளுடன் தொடர்ந்து முன்னிலை வகிக்கின்றது.

பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி தனது 50 ஓவர்முடிவில் 8 விக்கெற் இழப்பிற்கு 228 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் ராஜின்கலிக் 47ஓட்டங்களையும், ஹபிபுல்பஸ்சார் 37 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக முகமட்சாமி, உமல்குல், அப்துல் ரசாக் ஆகியோர் தலா இரண்டு விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்தார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 49.5 ஓவர்களில் 5விக்கெற்றுக்களை மட்டும் இழந்து 229 ஓட்டங்களைப்பெற்று வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணிசார்பாக யூசுப் ஜொகானா ஆட்டமிழக்காமல் 94 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் பங்களாதேஷ் அணிசார்பாக கபாஷ்பஸியா 42ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார். (உ-68)

## விளையாட்டுப் போட்டி

(காரைநகர்)

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.1.00மணிக்கு வித்தியாலய அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுளளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவமும், சிறப்பு விருந்தினராக தீவகக்கல்வி வலயப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணனும் கௌரவ விருந்தினராக வித்தியாசாலைப் பழைய மாணவர் வை.நமசிவாயமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி விளையாட்டுப் போட்டி, பாடசாலையின் மைதானத்தில் இடம பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-246)

# தியாகி திலீபனின் நினைவகலா நாட்கள்




### எங்கள் பார்த்தீபா!

எம்மண்ணின் விடிவுக்காய்
ஆகுதியான தியாக தீபமே!
செம்மனத் தோனே திண்ணிய
நெஞ்சுரம் கொண்டாயே!
எண்ணியே பதினாறு ஆண்டுகள்
ஓடியே மறைந்ததையா
எண்ணியே பார்க்கின்றோம்!
உன் தியாக உணர்வினையே

கவிஞர் யாழோன்

### தந்தாய் மனதில் புது உறுதி

மக்கள் புரட்சி வெடித்திடவே
மறவா நீ நோன்பிருந்தாய்
பக்க பலமாய்த் தமிழ்ப்படைக்கு
பாதை தனைநீ அமைத்துவிட்டாய்!

நீரும் அருந்தா உன்உறுதி
நீறு பூத்த நெருப்பாகி
போரை விரும்பும் எதிரிகளை
பொசுக்கி விடவும் தவறவில்லை!

தமிழீழம் வேண்டும் சுதந்திரமாய்
தந்தாய் மனதில் புதுஉறுதி
தலைவா உந்தன் வழிதனிலே
தமிழர் நாமும் உறுதிபூண்டோம்

மறைந்தது உந்தன் ஊனுடல்தான்
மனிதா நீயோ மரிக்கவில்லை
நிறைந்தது எங்கள் தமிழீழம்
நிறைவுடன் உந்தன் இலட்சியத்தில்

சூரியநிலா

# முரளியை முன்னுதாரணமாக கொள்கிறது இங்கிலாந்து

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சுத் தரத்தில் முன்னேற்றம் காணப்பட வேண்டுமானால், முரளிதரன் போன்ற சுழல்பந்துவீச்சு வீரர் ஒருவரை உள்ஞூரிலும் உருவாக்க வேண்டும் என்று இங்கிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் நசார் உஷைன் கருத்து வெளியிட்டுள்ளார். இங்கிலாந்து அணியில் திறமையான சுழல்பந்து வீச்சாளர்கள் எவரும் இல்லை என்பதையும் நசார் உஷைன் சுட்டிக்காட்டினார்.

எனவே முரளிதரன் போன்ற ஓர் சுழல்பந்து வீச்சாளரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நசார் உஷைன் இலண்டன் பி.பி.சி.செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டி ஒன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார். இங்கிலாந்து பிராந்திய அணிக்காக விளையாடிவருகின்ற முரளிதரன் போன்ற மணிக்கட்டு சுழல்பந்து வீச்சாளர் எவரும் இங்கிலாந்து பிராந்திய அணிகளில் இல்லை என்று கூறியுள்ளதுடன் இவ்வாறான சுழல்பந்து வீச்சாளர்களினாலேயே அதி திறமையாக பந்துவீசி அதிக விக்கெற்றுகளை கைப்பற்ற முடியுமென்று நசார் உஷைன் மேலும் கூறியுள்ளார்.

(உ-68)

### ஐ.நா.மகாசபையில் இன்று

# ஈராக்மீதான ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தி புஷ் பேசுவார்

(வாஷிங்டன்)

**ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் அங்கீகாரம் பெறாது ஈராக் மீது போர் தொடுக்க தான் எடுத்த தீர்மானம் சரியானது என ஐக்கிய நாடுகளிடம் தெரிவிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யு புஷ் கூறியுள்ளார்.**

இந்த விடயத்தில் தம்முடன் இணைந்து கொண்ட நாடுகளும் உரிய தீர்மானத்தையே எடுத்ததாகவும் புஷ் தெரிவித்துள்ளார்.

பொக்ஸ் செய்தி நிறுவனத்தின் பிரிட்கியூம் என்பவருக்கு அளித்த பேட்டியிலேயே புஷ் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 58வது பிரதான பொதுச்சபைக் கூட்டத்தில இன்று உரையாற்றவுள்ள அமெரிக்க ஜனாதிபதி அங்கு இவ் விடயங்களை தெரிவிக்கவுள்ளார்.


இதேவேளை, ஈராக்கிற்கென புதிய அரசியல் யாப்பை தயாரிப்பதற்கும், தேர்தல்களை நடத்துவதற்கும் சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகளின் உறுதிப்பாடு அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**சதாம் ஆதரவாளர்கள் தாக்கி அமெரிக்கர் 13பேர் பலி**

ஈராக்கில் அமெரிக்க இராணுவம் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார்க் குண்டுத் தாக்குதலில் இருவர் உயிரிழந்ததுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

சதாம் ஹீசைனின் ஆட்சி கவிழ்கப்பட்டதன் பின்னர் இதுவரை 78 அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக்கின் பாதுகாப்பு நிலமைகளை ஸ்திரப்படுத்துவது குறித்து



வெள்ளைமாளிகை விசேட கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப படுகின்றது. (பி-2)

## ஈராக்மீது அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தக்கூடாது

### முன்னாள் அதிபர் பில்கிளின்ரன்

ஈராக்மீது அமெரிக்கா தனது ஆதிக்கத்தை செலுத்தக் கூடாது என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

ஈராக்மீதான செயற்பாடுகளிற்கு ஐக்கியநாடுகளிற்கு தற்போது வழங்கப்பட்டுவரும் பங்களிப்பை விட பாரிய பங்களிப்பை வழங்க அமெரிக்கா இடமளிக்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதிகளவு நிதியை ஈராக்கிற்கு செலவிடுவதை காரணமாகக் காட்டி அந்நாட்டின் மீது அதிகளவில் ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கக் கூடாது. ஈராக்விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு முன்னுரிமை வழங்குவதனால் பொறுப்புக்களும், ஏற்படக் கூடிய ஆபத்துக்களும் பகிரப்படும். இதனால் ஈராக்விவகாரத்தில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது இலகுபடுத்தப்படுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (பி-2)

## ஈராக்கில் ஐ.நா.தூதரகம் அருகில் நேற்று மீண்டும் கார்க்குண்டுத்தாக்குதல்

### இருவர் கொல்லப்பட்டு 8பேருக்கு காயம்

(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்திலுள்ள ஐ.நா.தலைமையகத்திற்கு அண்மையில் மீண்டும் கார்க்குண்டு வெடிப்பு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதுடன் 8பேர் காயமடைந்துள்ளனர்.

குண்டுதாரியும், சம்பவ இடத்தில் நின்றிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தருமே உயிரிழந்துள்ளனர் என்று அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் தலைமையகத்திற்கும், ஹனல் ஹொட்டலிற்கும் அருகாமையிலுள்ள வாகன தரிப்பிடம் ஒன்றில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பு சம்பவம்,

ஈராக்கில் நிலை கொண்டிருக்கும அமெரிக்கப் படையினருக்கு எதிராக போராளிகள் நடத்திவரும் தாக்குதல்களின் தொடர்ச்சியாக நிகழ்ந்துள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த மாதம் ஈராக்கிலுள்ள ஐக்கிய நாடுகள் தூதரகத்திறகருகில் நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் ஐ.நா. வின் முக்கிய பிரதிநிதியொருவர் உட்பட 20 பேர் கொல்லபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

உலக தரிசனம்



ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகர உயிரியல் பூங்காவில் உள்ள இந்த மனிதக் குரங்கின் பெயர் கோபிடோ டி நீவ். தோல் புற்றுநோயால் அவதிப்படும் இது விரைவிலேயே இறந்துவிடும் என்று கால்நடை டாக்டர்கள் தெரிவித்திருப்பதால் பூங்காவில் சோகச் சூழல் காணப்படுகிறது.

### பொடா சட்டம் தொடர்பாக

## மத்திய அரசு அளித்தவாக்குறுதிக்கு மாநில அரசு மதிப்பளிக்கவில்லை

### தி.மு.க. விழுப்புரம் மாநாட்டில் கண்டனம்

(சென்னை)

பொடா சட்டத்தை உடனடியாக மீளப் பெற்றுக் கொள்ள வேண்டுமென மத்திய அரசை தி.மு.கழக மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

விழுப்புறத்தில் நேற்று முன் தினம் முடிவடைந்த அக்கட்சியின் மூன்று நாள் மாநாட்டில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இந்த மாநாட்டுக்கு முன்னாள் மேயர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்தார்.

மத்திய அரசு நாடாளுமன்றத்தில் அளித்த வாக்குறுதிக்கு மாநில அரசுமதிப்பளிக்காமல் அரசியல் காரணங்களுக்காக பொடா சட்டத்தைப் பயன்படுத்துவதாக அத்தீர்மானத்தில் தி.மு.க.கண்டித்துள்ளது.

இந்தச்சட்டத்தின் கீழ் கைது செய்யபபட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பழநெடுமாறன் உட்பட பலரை மாநில அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.என்று அந்தக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அரசியல் சட்டத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள மதசார்பின்மைக் கொள்கைக்கு குந்தகம் விளைவிக்கும் விதத்தில் தமிழ் நாட்டில் மத மாற்ற தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டதாகவும்,இதனை தி.மு.க .கண்டிப்பதாகவும் நிறைவேற்றப்பட்ட மற்றய தீர்மானம் ஒன்று கூறுகிறது.

காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு அளிக்கப்படும் வரை ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க பிரதமர் தலைமையிலான காவிரி நதி நீர் ஆணையம் தேவைபடும் போதெல்லாம் கூடிதமிழக விவசாயிகளின் நலன்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உட்பட 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இத்தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி அயோத்தியின் சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோயில் கட்டுவதை தி.மு.க ஒரு போதும் ஏற்காது என்று தெரிவிந்துள்ளார்.

சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் ஆலயம் கட்டுவதற்கு நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டால் அதனைத் தம் கட்சி எதிர்க்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் நாட்டில் கோயில்களில் பறவைகளையும்,விலங்குகளையும் பலிகொடுப்பதை தடை செய்யும் சட்டம் திராவிட கலாசாரத்தை அழிப்பதற்கான ஒரு முயற்சி என்றும் கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார். (பி-2)

## விவசாயியை காப்பாற்றிய கங்காரு

(கான்பரா)

அவுஸ்திரேலியாவில் புளூ என்ற கங்காரு மிருகம் விவசாயி ஒருவரின் உயிரைக்காப்பாற்றியுள்ளது.

உயிர் பிழைத்த விவசாயி தனது வயலில் புயலால் ஏற்பட்ட சேதங்களை ஆராய சென்ற சமயம் ஒரு மரத்தின் கிளை அந்த விவசாயியை தாக்கியுள்ளது.

இதனால் அவர் சுயநினைவிழந்து வீழ்ந்துள்ளார். அந்த சமயம் அங்கு நின்றிருந்த கங்காரு ஒன்று அபாய ஒலி எழுப்பியதாகவும் ஸ்தலத்தைவிட்டு அகலவுமில்லை என்றும் கூறப்படுகின்றது கங்காருவின் ஒலிகேட்டு அங்கு சென்ற விவசாயியின் மனைவி தனது கணவரை உயிருடன் மீட்டுள்ளார். (பி-2)

## பெண்ணை தம் காலில் விழவைத்த பஞ்சாயத்தார்

### அவரிடமே மன்னிப்புகோரினர்

(சென்னை)

கணவன் மனைவி விவகாரத்தில் மனைவியை தமது காலில் ஒரு நாள் முழுவதும் விழ்ந்து மன்னிப்பு கோரவைத்த பஞ்சாயத்துக்காரர்கள் மீண்டும் அந்தப்பெணணிடமே மன்னிப்புக் கோரியுள்ளனர்.

இச்சம்பவம் திருச்சி மாவட்டம் துறையூர் அருகே இடம் பெற்றுள்ளது.

வலயபட்டி கிராமத்தை சேர்ந்த சுகந்தி என்ற பெண்ணிற்கு ராாஜேந்திரன் என்பவருக்கும் 1991ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது.

கணவனால் அடிக்கடி பணம் கேட்டு துன்புறுத்தி வந்த சுகந்தி விவகாரத்து கோரி தனது கணவருக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தார்.

இதனை ஏற்றுக் கொள்ளாத சுகந்தியின் கணவன் பஞ்சாயத்துக்காரர்களின் தீர்ப்பை அணுகியுள்ளார். அவர்களிடம் தன்னுடன் சேர்ந்து வாழ சுகந்திக்கு உத்தரவிடக்கோரியுள்ளார். இதனையடுத்து பஞ்சாயத்திற்கு வருமாறு சுகந்திக்கு உத்தரவிடப்பட்ட போதும், அவர் அங்கு வர மறுத்துள்ளார்.இதனால் சுகந்தியின் தாயாரை ஊரைவிட்டு விலக்கப் போவதாக பஞ்சாயத்துகாரர்கள் மிரட்டியுள்ளனர்.

வேறு வழியின்றி பஞ்சாயத்திற்கு சுகந்தி சென்றுள்ளார். அங்கு அவர்கள் சுகந்தியை கணவனுடன் சேர்ந்து வாழுமாறும், அவ்வாறு வாழ மறுத்தால் 50ஆயிரம் ரூபா அபராதம்வழங்குமாறும்கோரியுள்ளனர்.

அல்லது தமது கால்களில் நாள் முழுவதும் வீழ்ந்து மன்னிப்பு கோருமாறு பஞ்சாயத்துக்காரர்கள் உத்தரவிட்டதையடுத்து சுகந்தி சம்பவதினம் காலை 10மணி முதல் மாலை 5மணிவரை அவர்களது கால்களில் வீழ்ந்து மன்னிப்புக் கோரியுள்ளார்.

பின்னர் சுகந்தியின் இரண்டு பிள்ளைகளையும் ராஜேந்திரனிடம் ஒப்படைக்குமாறு பஞ்சாயத்துக்காரர்கள் கூறியுள்ளனர். இதனை பொறுக்கமுடியாத சுகந்தி திருச்சி பொலிஸாரிடம் புகார் கொடுத்துள்ளார். பொலிஸார் இது தொடர்பாக தொடர்ந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி கற்பகவிநாயகம், பஞ்சாயத்துக்காரர்களை சுகந்தியிடம் மன்னிப்புக்கோரவைத்துள்ளார்.

அத்துடன், கம்யூட்டர் யுகத்தில் காலில் விழவைத்து அவமானப்படுத்துவது காட்டுமிராண்டித்தனமானது என்றும் நீதிபதி கூறியுள்ளார். பஞ்சாயத்தார் மேலும் இடையூறு விளைவித்தால் நீதி மன்றை நாடுமாறு பெண்ணுக்கு உத்தரவிடப்பட்ட நீதிப்தி விசாரணையை ஒத்தி வைத்தார். (பி-2)

# கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த)

# மாதிரிப் பரீட்சை – 2003

## பாடம :-தமிழ் மொழியும் இலக்கியமும்-I நேரம:-40நிமிடம்

ஆக்கம்:– திரு. பா.மகாலிங்கசிவம் B.A. (Hons)
(ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**1 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையை தெரிவு செய்க. கோடிட்ட எழுத்திலுள்ள சொல் பற்றிய வினாக்களுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01. மகனின் வெற்றிச் செய்தி கேட்ட தாய் இறும்பூதுற்றாள் இங்கு இறும்பூது என்பதன் பொருள்
 1) இறுமாப்பு 2) பெருமிதம் 3) கர்வம் 4) அகந்தை

02. கை வைத்தியம் செய்து நோயைக் குணமாக்கிக் கொண்டான். இங்கு கைவைத தியம் என்பதன் கருத்து
 1) கையாற செய்யப்பட்ட வைத்தியம் 2) கைக்கு செய்யப்பட்ட வைத்தியம்
 3) மருந்தின்றி செய்யப்பட்ட வைத்தியம் 4) சிறு வைத்தியம்

03. ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே - இங்கு புறந்தருதல் என்பது
 1) பேணி வளர்த்தல் 2) வெளியே தருதல்
 3) புறங்காட்டி ஓட வைத்தல் 4) புறத்தேவைகளை அளித்தல்

04. தைமாதப் பூர்வபட்ச ஐந்தாம் நாள் - இங்கு பூர்வபட்சம் என்பதன் எதிர்ப் பொருட்சொல்
 1) பூர்வீகமற்றது 2) வளர்பிறைக் காலம்
 3) அபரபட்சம் 4) அமங்கலமானது

05. அறம் தவறி நடந்து அபகீர்த்தியைத் தேடிக்கொண்டான்.இங்கு அறம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
 1) புறம் 2) தர்மம் 3) மறம் 4) நீதி

06. பின்வருவனவற்றுள் முளரியைக் குறிக்கும் தமிழ்ச் சொல்
 1) கமலம் 2) தாமரை 3) பங்கஜம் 4) அம்புயம்

07. பின்வருவனவற்றுள் மலையைக் குறிக்காத பெயர்
 1) பௌவம் 2) அடுக்கம் 3) வரை 4) அசலம்

08. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றின் தொகுதிப்பெயர்
 1) ஐம்பொறி 2) ஐம்புலன் 3) பஞ்சாமிர்தம் 4) ஐங்கணை

09. தேங்காயின் இளையது குரும்பை என்பது போல, பனங்காயின் இளையது
 1) பிஞ்சு 2) செங்காய் 3) நுங்கு 4) கச்சல்

10. மருத நிலத்தெய்வம்
 1) முருகன் 2) இந்திரன் 3) மாயவன் 4)கொற்றவை

11. உத்தரவுப் பத்திரத்தைக் குறிக்கும் இன்னோர் தமிழ்ச்சொல்
 1) அனுமதிப் பத்திரம் 2) நுழைவுச் சீட்டு 3) உரிமம் 4)ஆணை

12. ஏககாலத்தில் பல துறைகளிற் செலவிடப்படும் ஒருவனது சக்தியைக் குறிக்கும் சிறந்த உவமைத் தொடர்
 1) காட்டில் எறித்த நிலவு போல 2) இரண்டு தோணியிற் கால்வைத்ததுபோல
 3) கடலில் பெய்த மழை போல 4) ஆற்றிற் கரைத்த புளி போல

13. எத்தகைய பேரிடர் வந்தபோதும் தன்பண்பு மாறாத ஒருவன் தன்மையைக் குறிக்கும் பழமொழி
 1) கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு
 2) கூளைவாலன் கொசுவுக்கு அஞ்சாது
 3) பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது
 4) சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் வரை

14. தொடரில் உள்ள இரு சொல்லும் இடுக்கிய அடுக்கிடுக்குத் தொடர்
 1) பென்னம்பெரிய 2) வெவ்வேறு 3) கன்னங்கரேல் 4) பையப்பைய

**பொருத்தமான முடிக்குஞ் சொல்லைத் தெரிக.**

15. தண்டிக்கப்படவுள்ளவன் நீ
 1) அல்ல 2) அன்று 3) அல்லன் 4) அல்லை

16. 'மழைபெய்தாலும் பெய்யும்' என்பதில் வரும் உம்மை
 1) ஐயவும்மை 2) எண்ணும்மை
 3) இழிவுசிறப்பு உம்மை 4) எச்ச உம்மை

**பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிக.**

17. நீ பண்பாக நடந்தால்
 1) ஏன்மதிக்கப்படப்போகிறாய் 2) ஏன் அவமதிக்கப்படப்போகிறாய்
 3) ஏன்அவமதிக்கப்பட்டிருப்பாய் 4) ஏன் பெருமைப்படப்போகிறாய்

18. அவன் ஏன் குரைக்கிறான்?
இது 1) திணைவழுவமைதி 2) பால்வழுவமைதி
 3) திணைவழு 4) இடவழுவமைதி

19. 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' என்பதில் வினையாலணையும் பெயர்:
 1) சினம் 2) கொல்லி 3) சேர்ந்தாரை 4) என்னும்

20. 'விரைவாகச் சாப்பிடு' என்பதில் தொக்கு நிற்பவை
 1) எழுவாயும் பயனிலையும் 2) பயனிலையும் எழுவாயும்
 3) செயற்படுபொருளும் பயனிலையும் 4) எழுவாயும் செயற்படுபொருளும்

21. உயிர்மெய் எழுத்துக்கள் எண்ணிக்கை
 1) 30 2) 18 3) 216 4) 247

22. ஒரு நூலுக்கு அதனை எழுதியவர் அல்லாத பிறர் வழங்கும் உரை
 1) முகவுரை 2) முன்னுரை 3) பதிப்புரை 4) பொதுப்பாயிரம்

23. யானை பிளிறுவதுபோல எருது
 1) அகவும் 2) உறுமும் 3) கர்ச்சிக்கும் 4) முக்காரமிடும்

24. பனங்காய் என்ற சொற்றொடரில் ஏற்பட்டுள்ள புணர்ச்சி விகாரங்கள்
 1) தோன்றலும் திரிதலும் 2) தோன்றலும் கெடுதலும்
 3) கெடுதலும் திரிதலும் 4) மூன்று விகாரங்களும்

25. குறிப்பு வினைமுற்றுக்கு உதாரணம்
 1) இல்லை 2) வா 3) ஒழிக 4) வம்மின்

26. கட்டிக்கரும்பே! கண்மணியே கண்வளராய் இங்கு இடம்பெற்ற அணி
 1) உவமை 2) உருவகம் 3) தற்குறிப்பேற்றம் 4)வஞ்சப்புகழ்ச்சி

27. உண்கலம் - இது
 1) பண்புத்தொகை 2) உவமைத்தொகை
 3) வினைத்தொகை 4) உம்மைத்தொகை

28. உண்ணா நஞ்சு - இதில் வந்துள்ள உண்ணா என்பது
 1) பலவின்பால் வினைமுற்று 2) பெயரெச்சம்
 3) ஈறுகெட்டபெயரெச்சம் 4) வியங்கோள்

29. பகுதி திரிந்து ஒற்றுஇரட்டிக் காலங்காட்டிடும் வினைச்சொல்
 1) அற்றார் 2) அலர்ந்தார் 3) படிக்கும் 4) வளரா

**பின்வரும் ஒவ்வொரு வாக்கிய முற்பகுதிக்கும் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிக.**

30. குற்றியோ, மனிதனோ
 1) அங்கு நிற்பவன் 2) அங்குநிற்பவர்
 3) அங்குநிற்கும் உரு 4) அங்குநிற்பது

31. நீ ஊக்கமாகப் படித்ததாலன்றோ
 1) பரீட்சையில் சித்தியெய்தவில்லை 2) சித்தி எய்த முடிந்தது
 3) சித்தி எய்த முடியும் 4) சித்திஎய்தல் கேள்விக் குறியாகவுள்ளது

32. இனறைய இளைஞர்கள்
 1) அடக்கமின்றியோ அல்லது அட்டகாசமாகவோ நடப்பது நன்மை தராது
 2) அடக்கமின்றியோ அட்டகாசமாகவோ நடப்பது நன்மை தரா
 3) அடக்கமின்றியோ அட்டகாசமாகவோ நடப்பது நன்மை தருவதல்ல
 4) அடக்கமின்றியோ அட்டகாசமாகவோ நடப்பது நன்மைதருவதன்று

33. காலஞ்சென்ற சுப்பையா
 1) மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும்,உடுவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் மருத்துவ மனையில் பணியாற்றியவராவர்
 2) மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்டவரும் மானிப்பாய் மருத்துவமனையில் பணியாற்றியவராவர்
 3) மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மானிப்பாய் மருத்துவமனையில் பணியாற்றியவராவர்
 4) மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்டவரும், மானிப்பாய் மருத்துவமனையில் பணியாற்றியவருமாவார்.

34. போரினால் ஏற்பட்ட துயரங்கள்
 1) மறக்கப்படக்கூடியது அன்று 2) மறக்கப்படக்கூடியவை அன்று
 3) மறக்கப்படக்கூடியவை அல்ல 4) மறக்கக் கூடியது அல்ல

**பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்க.**

*தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க*
*கொண்டல்கள் முழவினேங்கக் குவளைகண் விழித்து நோக்க*
*தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்*
*வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ!*

35. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணி
 1) உருவகம் 2) உயர்வு நவிற்சி 3) உவமை 4) தற்குறிப்பேற்றம்

36. இப்பாடலில் காட்டப்பட்ட கலைநிகழ்ச்சி
 1) நாடகம் 2) நாட்டியம் 3) இசைக்கச்சேரி 4) சொற்பொழிவு

37. வண்டின் ரீங்காரத்திற்கு உவமை கூறப்பட்ட பொருள்
 1) தேன் 2) மகரம் 3) யாழ் 4) குழல்

38. முழவின் ஏங்க என்பது ஐந்தாம் வேற்றுமை
 1) ஒப்புப்பொருள் 2) எல்லைப்பொருள்
 3) ஏதுப்பொருள் 4)நீக்கப்பொருள்

39. எழினி என்பதன் பொருள்
 1) முகில் 2) அழகி 3) திரை. 4) கண்ணாடி

**கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் கிடக்கின்றன. அவற்றைக் கட்டுக் கோப்பான பந்தியொன்றாக்குவதற்குப் பொருத்தமான வைப்புமுறையைத் தெரிக.**

அ) இரண்டும் செல்வக் குடும்பங்கள்
ஆ) மற்றொரு குடும்பத்தைச் சார்ந்தவள் கண்ணகி
இ) இருவருக்கும் திருமணம் நடந்தது
ஈ) காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு பெரிய வணிகர் குடும்பத்தில் பிறந்தவன் கோவலன்
உ) சில ஆண்டுகள் அவர்களின் இல்வாழ்க்கை நன்றாக நடந்தது.

40. 1) உ, ஈ, அ, ஆ, இ 2) ஈ, ஆ, அ, இ, உ
 3) அ, ஈ, இ, ஆ, உ 4) ஆ, இ, உ, ஈ, அ

# கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த)

# மாதிரிப் பரீட்சை – 2003

## பாடம:-தமிழ் மொழியும் இலக்கியமும்-II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

(அ) மின்சாரத்தின் கண்டுபிடிப்பு மனித வாழ்க்கையைப் பெருமளவுக்கு இலகுவாக்கியுள்ளது. இன்று மின்சாரம் இல்லாமல் மனித வாழ்வே இல்லை என்னுமளவுக்கு நிலைமை காணப்படுகிறது. எவ்வெவ் மூலங்களிலிருந்து மின்சாரம் பெறப்படுகின்றதென்பதையும், மின்சாரத்தினால் மனிதகுலம் எவ்வெப் பயன்களைப் பெறுகிறதென்பதையும் கருத்தில் கொண்டு ஒரு விளக்கக் கட்டுரை.

(ஆ) இன்று சமாதானத்தின் அவசியம் எல்லாத் தரப்பினராலும் உணரப்பட்டுள்ளது. எந்தநேரம் என்ன நடக்குமோ என்ற ஏக்கத்துடனிருந்த மக்களுக்குத் தற்காலிகமாகவேனும் ஓர் ஆறுதல் கிட்டியுள்ளது. இவ்வகையில், நிலைத்த சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளையும், சமாதானம் ஏற்பட்டால் கிடைக்கப்போகின்ற நன்மைகளையும் எடுத்துக்

கூறும் சொற்பொழிவு.

3) திரைப்படங்களால் சமூகத்திற்கு நன்மையே ஏற்படுகின்றதென ஒருசாரார் கருதுகின்றனர். இன்னொரு சாராரோ திரைப்படங்கள் சமூகத்தைச் சீரழிக்கின்றன என்கின்றனர். இவ்விரு கருத்து நிலைகளையும் பிரதிபலிப்பனவாக உமக்கும், உமது நண்பருக்குமிடையேயான உரையாடல்.

4) ''நான் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தபோது திடீரெனத் தட்டுவடிவிலான விண்கலம் ஒன்று வந்து இறங்கியது. அதிலிருந்து இறங்கிய குள்ள உருவத்தைக் கொண்ட விசித்திரமான வேற்றுக்கிரகவாசிகளைக் கண்டு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தேன்...'' தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களை விளக்கும் ஒரு கற்பனைச் சித்திரம்

5) ''மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்'' என்ற பழமொழியின் பொருளை விளக்கும் வகையில் வாசகரின் உள்ளத்தை ஈர்க்கும் ஒரு சிறுகதை.

(30 புள்ளிகள்)

**கீழே தரப்பட்டுள்ள அ, ஆ, இ, ஈ, என்னும் உரைப் பகுதிகள் ஒவ்வொன்றையும் 15-20 சொற்களில் அமையும் வண்ணம் வேறுவேறாக எழுதுக. (சொல் எண்ணிக்கைகளை குறிப்பிடுக)**

அ) 'இந்த உலகமே பொய்' என்று நமது தேசத்தில் ஒரு சாத்திரம் வழங்கி வருகிறது. சந்நியாசிகள் இதை ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கட்டும். அதைப் பற்றி இந்த நிமிடம் எனக்கு வருத்தமில்லை. குடும்பத்திலிருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? நடுவீட்டில் உச்சரிக்கலாமா? அவச்சொல்லன்றோ? நமக்குத் தந்தை வைத்துவிட்டுப்போன வீடும், வயலும் பொய்யா? தங்கச் சிலைபோல் நிற்கிறாள் மனைவி; நமது துயரத்தில் எல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள். நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள். நமது குழந்தைகளை வளர்த்தாள் அவள் பொய்ய? குழந்தைகளும் பொய்தானா? பெற்றவரிடம் கேட்கின்றேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குலதெய்வம் பொய்யா?

ஆ) சங்ககாலத்திற்குப் பின் ''சரசோதி மாலை'' காலம்வரை ஈழத்தில் தோன்றிய கவிதைகள் எவற்றையும் இன்று பெற முடியவில்லை. இக்காலப்பகுதியிலே தோன்றிய கவிதைகள் அழிந்தோ, அழிக்கப்பட்டோ இல்லாது போயிருக்கலாம். இதனால், இக்காலப்பகுதியை ஈழத்து இலக்கிய வரலாற்றிலே இருண்ட காலம் என்று குறிப்பிடுவர். யாழ்ப்பாண மன்னர்கள் காலத்தில் இருந்து மெல்ல மெல்லத் துலங்கத் தொடங்கிய எமது இலக்கிய வரலாற்றிலே 19ஆம் நூற்றாண்டு மிகவும் உச்சமான ஒரு காலப்பகுதியாகக் கொள்ளப்படுகின்றது. ஈழத்தின் இன்றைய கவிதைப் போக்குக்கான ஊற்றுக்களையும், ஓட்டங்களையும் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தே கண்டுகொள்ளலாம்.

இ) கேட்போர்க்கு அந்நியமான ஒரு பொருளின் தன்மைகளை விளக்க அவர்களுக்கு நன்கு பரிச்சயமான இன்னொரு பொருள் துணையாக எடுத்தாளப்படுதல் வழக்கம். அந்த விளக்கப்படவேண்டிய அந்நியமான பொருள் உவமேயம் எனப்படும். விளக்கும் செயலில் துணையாக எடுத்தாளப்படும் பொருள் உவமானம் எனப்படும். இந்த உவமேய, உவமானப் பொருள்களிடையே ஒத்த தன்மைகள் - பொதுத் தன்மைகள் நிறைந்து விளங்க வேண்டியது அவசியம். இச்சந்தர்ப்பத்தில் மட்டுமன்றி ஒரு பொருளை நயந்து, வியந்து உரைக்கும் சந்தர்ப்பத்தில் உவமேயத்திலும் பார்க்க உயர்ந்த உவமானத்தையும் இகழ்ந்து வெறுத்து உரைக்கும் சந்தர்ப்பத்தில் உவமேயத்திலும் பார்க்க இழிந்த உவமானத்தையும் துணைக்கெடுத்துப் பயன்படுத்துவது இலக்கிய மரபு.

ஈ) ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தமக்கிடையில் தனியொரு நாணயத்தை உருவாக்குவதன் மூலம், ஐரோப்பாவுக்குள் வர்த்தகத்தையும், முதலீட்டையும் இலகுவாக்குவதுடன், அமெரிக்க டொலருக்குச் சமாந்தரமாக உலகப் பொருளாதாரத்தில் ஐரோப்பாவிற்கு அதிக பங்களிப்பைக் கொடுப்பதன் மூலம், பொருளாதார முடிவுகளைக் கூட்டாக எடுத்து, அரசியல் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தலாம். ஐரோப்பிய சமூகத்தில் உள்ள 15 உறுப்பு நாடுகளில் 11 நாடுகள் ஒன்றிணைந்தே ''யூரோ நிலம்'' என்ற புதிய வலயம் ஒன்றை ஏற்படுத்தின. இத்தகைய தனியான பொருளாதார வலயத்தின் பொது நாணயமாகவே ''யூரோ'' காணப்படுகிறது.

3) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழநாடு, சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களின் ஆட்சியிலும் அவர்களுக்கு உட்பட் பல குறுநில மன்னர்களின் ஆட்சியிலும் இருந்தது. அந்த 3 வேந்தர்களைப் பற்றிய குறிப்புக்கள் வடமொழி மகாபாரதத்திலும், வால்மீகி இராமாயணத்திலும் உள்ளன. மூவேந்தர்களின் தலைநகரங்களான வஞ்சியும், உறையூரும், மதுரையும் கலைக் கூடங்களாக விளங்கின. மூவேந்தர்களின் அரசியல் தலைமையும் எல்லாப் பகுதியாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மன்னர்களுக்கும் புலவர்களுக்கும் இடையில் நெருக்கமான உறவு காணப்பட்டது. அதியமான் என்னும் அரசனுக்காக ஔவையார் தூதுசென்ற செய்தியும் பேகன் என்ற தலைவனின் குடும்பத்தில் சிக்கல் ஏற்பட்டபோது, அவனுடைய மனைவிக்காகப் பரிந்து அரிசில்கிழார், கபிலர், பரணர் ஆகிய புலவர்கள் பாடிய பாடல்கள் புறநானூற்றில் உள்ளன. பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் வேந்தன் தன் பகைவர் மேல் பெருஞ்சினங் கொண்டு சூள் உரைத்ததாக உள்ள பாடல் ஒன்றில் ''என் பகைவர்களை நான் போரில் முறியடிக்காவிட்டால், மாங்குடி மருதன் முதலான சிறப்புடைய புலவர்கள் எனநாட்டைப் பாடாமல் நீங்கும் தாழ்வினை அடைவேனாக'' என்று கூறியுள்ளான். தமிழ் வேந்தர்கள் புலவர்களை மதிப்பவர்களாகவும், வீரம் நிறைந்தவர்களாகவும் போருக்கு அஞ்சாதவர்களாகவும் விளங்கியது போலவே அன்பு நிரம்பியவர்களாகவும், நீதிக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் விளங்கினார்கள்.

1) மூவேந்தர்கள் பற்றிய குறிப்புகள் எங்கெங்கு காணப்படுகின்றன?
2) மூவேந்தர்களினதும் தலைநகரங்கள் எவை?
3) மன்னருக்கும் புலவருக்குமிடையே நெருக்கமான உறவு காணப்பட்டமைக்கான ஆதாரங்கள் எவை?
4) பேகனின் குடும்பச் சிக்கலைத் தீர்க்கப் பாடிய புலவர்கள் யாவர்?
5) இங்கு கூறப்படும் பண்டைத்தமிழ் இலக்கியம் எது?
6) மன்னவர்களிடம் காணப்பட்ட நற்பண்புகள் எவை?
7) பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக?

1.சூள் உரைத்தல் 2. கலைக்கூடம் 3. சிக்கல் (15 புள்ளிகள்)

4) பிரபல பத்திரிகை ஒன்றில் எழுவினைஞர் (**Clerk**) பதவிக்கான வெற்றிடம் ஒன்று இருப்பதாக விளம்பரம் வந்துள்ளது. குறித்த பத்திரிகையின் ஆசிரியருக்கு

1) உமது விபரம்

2) குறித்த பதவி தொடர்பாக நீர்கொண்டுள்ள திறமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

(15புள்ளிகள்)

# கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த)

# மாதிரிப் பரீட்சை — 2003

## பாடம :-தமிழ் மொழியும் இலக்கியமும்-III

**பகுதி - I நேரம்: 2மணி**

**1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை தருக.**

1. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.

(அ) ''நின்றுணை நாயன் தன்பா நெருங்கியே யாரு மெய்ப்ப வென்றியே கொண்டயான்...''

1) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2) யாருக்குக் கூறப்பட்டது?
3) நின்றுணை நாயன் என்று கூறப்படுபவர் யார்?
4) இக்கூற்று இடம்பெறும் இலக்கியத்தைப் பாடியவர் யார்?

(ஆ) ''கோவம் பசிய ஆத்தா துடா தம்பி! நீயென்ன செய்வாய் ஒனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்''

1) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2) யாருக்குக் கூறப்பட்டது?
3) கோபத்திற்குக் காரணம் யார்?
4) இக்கூற்று இடம்பெறும் கதை யாது?

(இ) ''இப்பாத்திரம் ஆபுத்திரனிடம் இருந்து இங்கு வந்தது. இது கொண்டு உலகத்தின் பசியைப் போக்கும் தருமத்தை நீ செய்யவேண்டும்''

1) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2) யாருக்குக் கூறப்பட்டது?
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4) இங்கு கூறப்படும் பாத்திரம் எது?

(ஈ) ''இனி நாம் அம்புதுரக்குவதல்லால் வேறோர் சொல் உண்டோ?''

1) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2) யாருக்குக் கூறப்பட்டது?
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4) யார்மேல் அம்பு துரக்குமாறு கூறப்பட்டது? (20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி, அவை ஒவ்வொன்றிலும் கோடிட்ட எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

அ) வழிவரும் இளைப்பினோடும் வருந்திய பசியினாலே
அழிவுறும் ஐயன் என்னும் அன்பினில் பொலிந்து சென்று
குழிநிரம்பாத புன்செய் குறும்பயிர் தடவிப்பாசப்
பழிமுதல் பறிப்போர் போலப பறித்தவை கறிக்கு நல்க.

ஆ) எண்ணருந் துயர்க்கெலா மிறுதிகாட்டு மெய்ப்
புண்ணியம் உருக்கொடு பொலிந்திலங்கிய
வண்ணமென் றுணர்வுனார் மனங் களிப்புற
நண்ணினன இருஞ் சுவிசேஷ நாமத்தன்.

இ) கிளையொடும் பகைஞரோடும் கேடிலா உயிர்கட்கெல்லாம்
களைசுன தம்பிமாரை வேரொடும் களையக் கண்டும்
இளையவன் பிரியமாயம் இயற்றியே கொண்டு போய
வளைஎயிற்(று) அரக்கன் வெம்போர்க்(கு) இனிஇவன வருவ(து) உண்டோ?

ஈ) துஞ்சிய மைந்தனை எடுத்துச் சுமந்து போந்து,
சுடுவார் அற்(று) இடுகாட்டில் தோள்மேல் ஏற்றிப்
பஞ்சிபடும் பாடு படும் பாவி யேறகுப்
பணம் ஏது? கொள்ளி முறிப்பாதி ஏது,
நெஞ்சு தளர்ந்(து) அருவினையேன் வருந்தக் கண்டும்
நீ இரங்காய்! என இரங்கி நிற்குங் காலை,
வஞ்சிதிரு மணிமிடற்றில் வயங்கா நின்ற
மங்கலநாண் கண்(டு) இறைவன் மறித்தும் சொல்லான்.

உ) ஆடவர் மடவாரின்ன வளஇவனுங் கணிதமில்லார்
நீடரு நகரின் வாயனீர்மடை திறந்தாலென்னப்
பாடுறுஞ் சபதத் தோடும் பாவரண் புறத்தி னெய்திக்
கோடுறுங் குபிரர் மன்னன் கொலையின்மேற் கருதிநின்றான். (20 புள்ளிகள்)

3) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக.

அ) நள்ளிரவு வேளையில் மாறனார் வயலுக்குச் சென்று விதைத்த நெல்லினை எடுத்துவந்தவாற்றினை விளக்குக.

ஆ) ''யாரை நீ அவலிக்கின்றனை?'' என சுவிசேஷன் கேட்டபோது அத்மவிசாரி கூறிய பதில்கள் எவை?

இ) இராவணன் இனிப் போர்புரிய வரமாட்டான் என என்னென்ன காரணங்களை இராமன் கூறினான் என அங்கதன் கூறுகின்றான்? (15 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக.

அ) ''சகீனாக் கிழவியின் வாழ்க்கை அர்த்தமற்றது'' ஆராய்க.

ஆ) மலையக இலக்கிய வளர்ச்சியில் 1940 வரை காணப்பட்ட நிலைமையினை எடுத்துக்காட்டுக.

இ) தங்கம்மா பாடலில் அவளது கணவனின் பரிதாப நிலையினை விளக்குக.

(15 புள்ளிகள்)

5. ஏதேனும் ஒரு, வினாவுக்கு விடை தருக.

அ) சினம் பற்றி வள்ளுவரும், பாரதியும் கூறிய கருத்துக்கள் எவை?

ஆ) ஏழையர் கண்ணீரின் வலிமைக்கு இக்கட்டுரையில் காட்டப்பட்ட உதாரணங்கள் எவை?

(10 புள்ளிகள்)

6. அ) நபிகளாரைக் கண்ட கதீஜா நாயகியின் உள்ளத்து உணர்வுகளை உமறுப் புலவர் எவ்வாறு விளக்குகிறார்.

ஆ) கதீஜா நாயகி வறுமையுற்றது ஏன்?

(10 புள்ளிகள்)

# இந்திய மீனவர்கள் எமக்கு இடையூறாகச் செயற்படுகின்றனர் இலங்கை மீனவர்கள் எம்மீது வீண்பழி சுமத்துகின்றனர்

## மீனவர் சங்கங்களின் தலைவர்கள் மாறிமாறிக் குற்றச்சாட்டு

(லண்டன்)

**இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்து வருவதாக இலங்கை மீனவர்கள் குற்றஞ்சாட்டுவது மிகவும் தவறானது என்பதுடன், இலங்கை மீனவர்கள் எமது மீனவர்களை மனிதாபிமான முறையில் நடத்துவது இல்லை.**

**தமது கடற்பிரதேசத்தில் அத்துமீறி நுழைந்து விட்டதாகக் கூறி எமது மீனவர்களை அடித்தும், விரட்டியும், துன்புறுத்தி வருகிறார்கள் என்று இராமேஸ்வரம் மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் என்.தேவதாஸ் பி.பி.சி.தமிழ்ச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.**

அவர் இது தொடர்பாக மேலும் கருத்துக்கூறுகையில்,

எமது மீனவர்கள் பரம்பரை பரம்பரையாகவே இந்தியக் கடற்பரப்பில் மீன் பிடித்து வருகின்றார்கள்.

தற்செயலாக திசை மாறி இலங்கைக் கடற்பரப்பிற்குள் சென்று விட்டால், அதனை பாரதூரமான குற்றமாகக் கருதி எமது மீனவர்களை சிறை பிடித்து விடுகிறார்கள். அவ்வாறு பல இந்திய மீனவர்கள் யாழ்ப்பாண சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவிக்க நாம் பல முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.இந்திய அரசிற்கும் இது பற்றி அறிவித்து இருக்கின்றோம்.

இலங்கை அரசிடமும் இதுபற்றி முறையிட்டு இருக்கிறோம்.எதுவித பலனும் இதுவரை கிடைக்கவில்லை. எனினும், இலங்கை அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தையொன்றை நடத தவுள்ளோம்.

ஏற்கனவே,இந்திய மீனவர்களிற்கும், இலங்கை மீனவர்களிற்கும் இடையில் திருவரங்கபுரத்தில் பேச்சுவார்தையொன்று நடைபெற்றது. அதில் நானுய கலந்து கொண்டு எமது மீனவர்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறினேன். இருந்தாலும், அந்தச் சந்திப்பால் எந்தவித பலனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

எனவே, இலங்கை அரசுடன் இனி நேரடியாகப் பேசி. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்றார்.

இதேவேளை,வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து பி.பி.சிக்கு கருத்துக் கூறுகையில்,

இந்திய மீனவர்கள் கடந்த 20 ஆண்டுகளாக அதாவது இலங்கையில் இடம்பெற்ற யுத்த காலத்தில் தாராளமாக இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடித்தவர்கள் என்பதை அவர்கள் மறுக்க முடியாது.

அந்தக் காலகட்டத்தில் எம்து தமிழ் மீனவர்கள் படையினரின் கெடுபிடிகளால் கடலில் இறங்குவதில்லை. கடற்பரப்பின் பெரும் பகுதியை இலங்கை இராணுவத்தினர் ஆக்கிரமித்திருந்தனர். இதனால், எம்மவர்களின் தொழில் உரிமையும் பறிக்கப்பட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ள தற்போதைய சமாதானச் சூழ்நிலையில், எல்லா விதத்திலும் பாதிக்கப்பட்ட எமது மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்து வருவதற்கு இந்திய மீனவர்கள் இடையூறாக இருந்து வருகிறார்கள்.

எமது மீனவர்கள் இதுவரை பட்ட அல்லல்களை அவர்கள் உணருவதில்லை. அவர்களின் துன்பகரமான வாழ்க்கையைப் பற்றிச் சிந்திப்பது இல்லை.

இதனால், எமது மீனவர்கள் இந்த விடயத்தில் கொஞ்சம் இறுக்கமாகவே இருக்கிறார்கள். சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பரப்பில் நுழையும் இந்திய மீனவர்களை கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைக்கின்றார்கள்.

இருப்பினும்,இந்திய மீனவர்கள் இனிமேலாவது மனிதாபிமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் எனக் கோருவதுடன், திசைமாறி வருபவர்களை நாம் விட்டு விடுவோம். மீனவர்களிடையே மோதல்களை உருவாக்க இடமளியோம் என்பதை இங்கு தெளிவாகக் கூறுகிறேன்.

இதுபற்றி இந்திய மீனவர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தையொன்றை நடத்தவும் தயாராகவே இருக்கின்றோம் என்றார். (உ-62,10)

## கொழும்புத்துறைமுகம் ஊடாக 12 ஆவது கப்பல் சேவை

(கொழும்பு)

கொழும்புத்துறைமுகத்தின் ஊடாக பிரான்ஸின் முன்னணி கப்பல் சேவை நிறுவனம் ஒன்று ஐரோப்பிய நாடுகளுக்கான கப்பல் சேவை ஒன்றை எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கவுள்ளது.

பிரான்ஸின் சீ.எம்.ஏ.அண்ட் சீ.ஜி.எம் கம்பனி என்ற நிறுவனம் கொழும்புத் துறைமுகத்தின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கான சேவையில் 7 கப்பல்களை ஈடுபடுத்தவுள்ளது.

கொழும்புத்துறைமுகத்தின் ஊடாக ஆரம்பிக்கப்படும் 12வது கப்பல் சேவை இது என துறைமுக அதிகாரசபையின் தலைவர் பராக்கிர விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

ஆசியாவின் கொள்கலன் ஏற்றி இறக்கும் துறைமுகமாக கொழும்புத் துறைமுகம் விளங்குவதனாலேயே இவ்வாய்ப்பு கிடைத்தது என அவர் மேலும் தெரிவித்தார். (தி-60)



## ச.ச.நிலையங்களின் பிரதிநிதிகளையும் வெளிநாட்டவர்கள் சந்திக்க வேண்டும்

### வலிகாமம் கோட்ட ச.ச.நி.நிர்வாகிகள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

மீள் குடியேற்றம் ,உயர் பாதுகாப்பு வலயம் ஆகியன குறித்து ஆராய வரும் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் யாழ். செயலகத்தை மட்டும் தரிசித்துச் செல்வதை மாற்றி, பாதிக்கப்பட்ட எம் மக்கள் பிரதிநிதிகளாகிய சனசமூக நிலையப் பிரதிநிதிகளையும் சந்தித்து உண்மை நிலையை அறிந்து செல்ல வேண்டும் என கோரிக்கை விடுவதென, வலகாமம் கோட்ட சனசமூக நிலைய நிர்வாகிகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கோட்ட சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மருதனார்மடம் இராமநாதன் கலலூரி மண்டபத்தில் நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் மேலும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

அவை பின்வருமாறு,

* அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் நாட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கும் நிதிகளை உரிய அமைப்புக்கள் ஊடாக ஒதுக்காது தங்கள், தங்கள் வாக்கு வங்கியினை நிரப்பும் நோக்கில் ஒதுக்குவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.
* குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. அதற்கான காரணங்களில் ஒன்று, குடாநாட்டின் வீதிகளின் அகலங்கள் சுருங்கி வருகினறமை. இதனை ஒழுங்குபடுத்துவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்த வேண்டும்.
* யாழ்.குடாநாட்டினுள் உள் நுழைநதுள்ள சர்வதேச தொண்டு நிறுவனங்கள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தாம நினைத்தபடி வேறுவேறான பயிற்சிகளை அளிக்கின்றன. அப்பயிற்சிகளை ஒருமுகப்படுத்தப் பட்டதாக்கி சமுதாயத்திற்கு பிரயோசனமாக்குவதோடு பணியாற்றி வரும் முன்பள்ளி ஆசிரியர்களின் வேதனத்தையும் சீராக்க சம்பந்தப் பட்ட அனைவரும் முன்வர வேண்டும்.
* சமூகத்திற்காக தொண்டாற்றுகின்ற சனசமூக நிர்வாகிகள் பொது வேலைத் திட்டத்திற்காக அரச திணைக்களங்களை நாடும்போது அரச உத்தியோகத்தில் உள்ளவர்கள் அவர்களுக்கு மதிப்பளிக்க முன் வரவேண்டும்.
* தமது பிரதேசங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சமுதாயச் சீரழிவுகளை சரி செய்து ஒழுங்குபடுத்த அப்பகுதி சனசமூக நிலையங்கள் முன்வந்து பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.
* இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்க முடியாது. புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில், இடம் பெயர்ந்து வாழும் மக்கள், தம சொந்த இடங்களுக்குச் செல்ல உடன் வழி சமைக்கவேண்டும்.
* மக்களை நேசித்து மக்கள் பிரச்சினையை விளங்கிக்கொண்டு மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியவர்களாகிய விடுதலைப்புலிகளின் கைகளில் வலுவான இடைக் கால நிர்வாகத்தை உடன் கையளிக்க ஸ்ரீலங்கா அரசாங்கம் முன்வர வேண்டும்
* கிராமம் தோறும் சமூகத்தொண்டர்களை உருவாக்கும் பயிற்சிகளும், தலைமைத்துவப் பயிற்சிகளும் வழங்குவதற்கு அனைத்து சனசமூக நிலையங்களும் ஒத்துழைக்க வேண்டும்.
* மாதந்தோறும் இதுபோன்ற கலந்துரையால் இடம்பெற வேண்டும்

(உ-10)

### ஆட்டோ சாரதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை யாழ். சிறைச்சாலைக்கு அண்மையாக டொல்பின் ரக வாகனத்துடன் ஆட்டோ மோதியதில் , ஆட்டோ சாரதி தலையில் படுகாயமடைந்தார். அமிர்தலிங்கம் என்ற 42 வயதான மாட்டீன் றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆட்டோ சாரதியே படுகாயமடைந்தவராவார்.

இவர் தற்போது யாழ்போதனாவைத்தியசாலை அவசர சிகிச்சைப் பாிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். (பி-7)

### சுகாதார ஊழியர் போராட்டத்துக்கு

## ஜனாதிபதி ஆதரவு தெரிவிப்பு இதனைச் செயலகம் மறுப்பு

(கொழும்பு)

சுகாதார ஊழியர்களால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்க ஆதரவு தருவதாக வெளியான செய்திகளை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், இப்போராட்டத்துக்கு ஆதரவு தருவதாக ஜனாதிபதி எச்சந்தர்ப்பத்திலும் வெளியிடவில்லை.

இவ்வேலை நிறுத்தப் போராட் டம் பற்றி சுகாதார அமைச்சர் பி.தயாரடண ஜனாதிபதிக்கு அறிவித்திருந்த வேளை,இதனை தேசிய ரீதியில் முக்கிய பிரச்சினையாகக் கருதி, அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவு தருவதாகவும்,

இவ்விடயம் குறித்து சுகாதார அமைச்சருடன் கலந்துரையாட இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-6)



நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலையின் சமய பாடப் பரீட்சைப் பரிசளிப்பு விழாவில் மாணவிகள் திருமுறை ஓதுவதையும், பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் ஒருவருக்கு பேராசிரியர் வி.சிவசுவாமி பரிசில் வழங்குவதையும், அருகில் ஆசிரியர் லலீசன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## இன்று ஒரு தகவல்

# ஒத்துப்போதல்

மனிதன் ஆறுஅறிவு படைத்தவன். எதையும் சிந்திக்கும் திறன் மிக்கவன் . எது நல்லது எது கெட்டது என்பதைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவன். எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக்கூடாது என்பதும் மனிதனுக்குப் புரியும். பின்னர் ஏன் சமுதாயத்தில் குழப்பம் வருகின்றது? ஏன்வேறு பாடுகள் ஏற்படுகின்றன? எதற்காகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன?

இவற்றைச் ஆழச் சிந்தித்துப் பார்த்தால் நன்றாக விளங்கும். ஒத்துப்போகும் தன்மை இல்லாமையே இவற்றிற்கெல்லாம் காரணம் என்பது! நான் பெரியவன், நான் நல்லவன், நான் செய்வதுதான் சரி என்று எண்ணுபவர்கள் ஒரு பக்கம்! அவன் யார் எனக்கு அறிவுரை கூறுவதற்கு? அவன் எப்படி அவ்வாறு கூறலாம்? அது எப்படி நடக்கலாம்? இவை அப்படி நடக்கக் கூடாது. அவை அப்படி நடக்கக்கூடாது! அவன் அப்படிச் செய்யக் கூடாது என்று கோபப்படுபவர்கள் இன்னொரு பக்கம்.

இப்படி அவரவர் தத்தம் வேலைகளைச் செய்வதாக, கடமையைச் செய்வதாக, பிடித்ததைச் செய்வதாக எண்ணினால் எப்படி குழப்பம் வரும்? எப்படிப் போராட்டம் தோன்றும்? ஒருவர் வழியில் ஒருவர் தலையிடத் தேவையில்லை என்று எண்ணவேண்டும். அவரவர்க்குப் பிடித்தவற்றை அவர்கள் செய்கின்றனர். நானும் எனக்குப் பிடித்ததைச் செய்கின்றேன் என்று செயற்பட வேண்டும். ஒருவர் கருத்தை இன்னொருவர் மீது திணிக்கக்கூடாது.

இப்படி வாழ்ந்தால் அது மிகுந்த நன்மை பயக்கும் என்று எண்ணவேண்டும்.

ஒரு மருத்துவரிடம் ஒருநாள் நோயாளி ஒருவர் செல்கின்றார். இவர் “கையில் ஒரு பெரிய கட்டி ஒன்று வந்துள்ளது. வலியால் உயிர் போகின்றது!” என்று டாக்டரிடம் கூறுகின்றார். அந்த மருத்துவரோ “பயப்பட வேண்டாம்! நன்றாகக் குணமாகிவிடும். நான் பரர்த்துச் சரி செய்து விடுகின்றேன். அது ஒன்றுமில்லை” என்று அவனது உள்ளத்திற்கு ஏற்றாற்போல் பதில் கூறுகின்றார்.

இது அந்த மருத்துவரின் ஒத்துப்போதல் இயல்பு. அவனுக்கு விரலில் உள்ள கட்டியை அறுத்தெடுக்க வேண்டும். அதை உடனே சொன்னால் அவன் தாங்க மாட்டான். அவனது மனநிலையோடு ஒத்துப்போய் “ஒன்றுமில்லை” என்கின்றார். அவனுக்கு அப்போதே வலி குறைந்துவிடும்.

தன் குழந்தைக்குச் சோறு ஊட்டுகின்றாள் தாய். குழந்தை உண்ணமாட்டேன் என்று அடம்பிடிக்கின்றது. வெளியே சென்றால் உண்கின்றேன் என்கின்றது. வெளியே கூட்டிச் செல்கின்றாள் தாய். வெளியே வானில் நிலவு தெரிகின்றது! குழந்தை நிலாவைப் பிடித்துத் தருமாறு தாயிடம் கேட்கிறது. அப்போது அந்தத் தாய் மறுப்புத் தெரிவிக்கவில்லை “நிலா நிலா ஓடி வா” என்கின்றாள். குழந்தையின் வாயில் உணவு தானாக நுழைகின்றது. இது எதனால்? குழந்தையின் மனநிலையோடு தாய் ஒத்துப்போவதால்!

ஒருவன் தன்னைத் தாக்க வருகின்றான். வரட்டும் பார்த்துக்கொள்கின்றேன் என்று எதிர்த்து நின்றால் அங்கே ஒரு கைகலப்பு நிச்சயமாக உருவாகும். ஏதுமில்லாமல் அமைதியாக நின்றால் வந்தவனும் அமைதியாகவே போய்விடுவான். “என்ன வேண்டும்? நீ சொல்லுவது போல் நான் கேட்கின்றேன் சொல்” என்றால் அவன் ஏன் இவனைத் தாக்கப்போகின்றான். பிறகு அவனுக்கு அமைதியாக புரியவைக்க முடியும்.

ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தையும் காட்டு என்று கூறியது ஒத்துப் போதலின் இயல்பினைக் காட்டுவதற்கே. நெருப்பை நெருப்பினால் அணைக்க முடியாது. அதனை நீர் தெளித்தால் அணைத்து விடும். ஒத்துப்போதல் நீரின் தன்மை.

ஒத்துப்போகாமை வன்மையையே வளர்க்கும். வள்ளுவர் உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் என்று கூறுவது இந்த ஒத்துப்போதலைத் தான். ஊரோடு ஒத்துப்போ என்ற வழக்குத் தொடர் ஒன்றிருப்பதனையும் உணர வேண்டும்.

இன்றும் எல்லா வீடுகளுக்கும் செல்பவன், எல்லோரது நன்மை, தீமைகளிலும் கலந்து கொள்பவன், எல்லோரிடமும் நன்கு பழகுபவன் ஊரில் நன்மதிப்புப் பெற்று விளங்குவதை உணர முடிகின்றது. நல்லவன் என்று பாராட்டுப்பெறுகின்றான். ஒதுங்கியிருப்பவனை ஊர் ஒதுக்கி விடுகின்றது. முரண்பட்டு நிற்பவனை ஊரார் புறந்தள்ளி விடுகின்றனர். பலரோடு ஒத்து உடன்பட்டு உறவு கொண்டு வாழ்வதே மனித வாழ்க்கை. தெளிவாகக் கூறுவதானால் அதுதான் ஆறுஅறிவு படைத்ததன் அடையாளம். மனித நேயம் மேலோங்க வேறு பாடற்ற சமுதாயம் மலர ஒத்துப் போதல் என்னும் உயர் பண்பு தழைக்க வேண்டும்.

முனைவர் தங்கராஜா

# அரசின் சமாதான முயற்சிகளுக்கு தென்னாபிரிக்கா ஆதரவு வழங்கும்

## அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளாலும், ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தாலும் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு தென்னாபிரிக்கா தொடர்ந்து ஆதரவு வழங்கும் என, அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் எம்.எம்.ரி.ஏ.லொக்கோட்டா தெரிவித்துள்ளார்.

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை சவூதித் தலைநகர் றியாத்தில் நேற்று முன்தினம் சந்தித்தபோதே அவர் இதனைத்தெரிவித்தார்.

இச்சந்திப்பில், தென்னாபிரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் தற்போது இரு தரப்பினராலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளின் கட்டங்கள் குறித்து பாராட்டியுள்ளதுடன்,

இச்சமாதான முயற்சியின் முன்னெடுப்புகள் முழு உலகிற்கும் உதாரணமாக அமையும் என்றார்.

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் பங்கேற்க தென்னாபிரிக்க அரசாங்கமும் ஆர்வம் கொண்டுள்ளது. தற்போது இலங்கையில் நிலைத்திருக்கும் அமைதிச் சூழல் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதே எமது நாட்டின் ஆசை.

அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலி களுக்கு எதிராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சந்தர்ப்பத்திலும் போர் தொடுப்பது இல்லை என திடசங்கற்பம் பூண்டுள்ளார்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா அநாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காக மேற்கொண்ட முயற்சிகளையும் அமைச்சர் அங்கு பாராட்டினார். (தி-60)

# யாழ். குடாநாட்டில் மாதாந்தம் 9 மெற்றிக்தொன் மீன்பிடிப்பு

(திருநெல்வேலி)

கடந்த 1983ஆம் ஆண்டு காலப் பகுதியில் திரட்டிய புள்ளி விபரங்களின் படி, யாழ். குடாநாட்டில் மாதாந்தம் 45ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மீன் பிடிக்கப்பட்டு வந்த போதிலும் தற்போது திரட்டிய புள்ளி விபரங்கள் மூலம், 9 மெற்றிக் தொன் மீனே மாதாந்தம் பிடிக்கப்பட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

இதேவேளை, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலப்பகுதியான 1995ஆம் ஆண்டிற்கு முன்பு 2 ஆயிரம் மெற்றிக்தொன் மீன் இங்கு பிடிக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

கூடுதலாக மீன் பிடிக்கப்படும் இடங்களான வலி வடக்குப் பிரதேசம் மற்றும் தொண்டைமானாறு முதல் மாதகல் வரையான கடற்பிரதேசங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதே இந்த நிலைக்குக் காரணமாகும்.

அத்துடன், ஊர்காவற்றுறை, மண்டைதீவு, காரைநகர் ஆகிய மீன்பிடிக்குப் பெயர்போன கடற்பகுதிகளிலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக மீன்பிடி பாதிப்புற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தவிரவும், குடாநாட்டின் கரையோரப் பகுதி மீனவர்கள் கடந்த 1983 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் சேந்தாங்குளத்தில் தங்கி நின்று மீன் பிடித்தல் மூலம் மாதாந்தம் 20 மெற்றிக் தொன் மீனைப் பிடித்து வந்தனர்.

தற்போது, இப்பகுதியில் தங்கி நின்று மீன் பிடிப்பதற்கு அனுமதி இல்லை என்பது தெரிந்ததே.

இது ஒரு புறமிருக்க, 20 வருடப் போரில் 2 ஆயிரத்திற்கும் அதிகமான குடாநாட்டு மீனவர்கள் மரணமடைந்துள்ளதுடன், ஆயிரக்கணக்கானோர் கடும் ஊனங்களுக்கும் சுமார் 2 ஆயிரம் பேர் சாதாரண ஊனமுற்றும் உள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் தொடக்கம் மன்னார் மாவட்ட மறிச்சுக்கட்டி, குதிரைமலை வரை சுதந்திரமாக வட பகுதி மீனவர்களை மீன் பிடிக்க அனுமதித்தால் 5 இலட்சம் மெற்றிக் தொன் மீனைப் பிடிக்க முடியும் எனவும் இது இலங்கையின் மீன உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-43)

## இராசி பலன்

**23. 09. 2003**

**(புரட்டாதி 06,செவ்வாய்)**

**துவாதசி-பி.ப. 1 .03 வரை**

**ஆயிலியம் - பி.ப. 1. 51 வரை**

**இராகுகாலம் - 3.02 - 04.32**

**சுபநேரம் - 10.32- 12.02**

**பிரதோச விரதம்**

**மேடம்**
வியாபார விருத்தி,எடுத்த கருமங்கள் தாமதமாகும், அமைதிக் குறைவு, திடீர் நன்மை.

**இடபம்**
சோம்பல் நிலை, தொழிலில் அசமந்தம், காரிய தாமதம், வீண்பகை

**மிதுனம்**
கூட்டு முயற்சி , திடீர் பயணம், தனவரவு, பிறருக்கு உதவுதல்

**கடகம்**
புத்தி சாதுரியம், குடும்ப சுகம், தொழில் முயற்சி, பெரியோர் ஆதரவு.

**சிங்கம்**
நல்ல முயற்சி, தேக சுகம், போசன நன்மை, தெய் சிந்தை

**கன்னி**
காரிய அலைச்சல், உறவினர் வெறுப்பு, அதிக செலவு, உஷ்ண வியாதி

**துலாம்**
எதிர் பாராத நன்மை, எடுத்த கருமங்கள் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி, தனலாபம்.

**விருச்சிகம்**
அதிக பிரயாசை, மேன்மையடைதல், பாராட்டு, முயற்சி கைகூடும்.

**தனுசு**
இடமாற்றம், மந்தநிலை, காரிய தாமதம், புதிய திருப்பம்.

**மகரம்**
எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தாமதம், உடல் நலக் குறைவு, போசன சுகம்

**கும்பம்**
எடுத்த கருமங்கள் கைகூடும், பிறரால் பாராட்டப்படுதல், தனவரவு, தெய்வ சிந்தை

**மீனம்**
தொழில் முன்னேற்றம், நண்பர்கள் சந்திப்பு, காரிய சித்தி,பொருள் சேர்க்கை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# குடியிருப்புக்களுக்கு அருகில் கோழிப்பண்ணைகள் அமைப்பு

(சுதுமலை)

வலி-தென்மேற்கு பிரதேசசபையின் ஆனைக்கோட்டை உபஅலுவலகம், மானிப்பாய் பட்டினசபைப் பகுதி ஆகியவற்றின் குடியிருப்புகளிற்கு அருகில் கோழிப்பண்ணைகளை அமைத்து, சுற்றாடல் சுகாதாரத்திற்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் வளர்த்து வருவதாக பொதுமக்களிடமிருந்து பல முறைப்பாடுகள் தொடர்ந்தும் கிடைத்து வருவதாக பிரதேச சபையின் ஊஞூராட்சி உதவியாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அப் பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களிற்கு முறைப்பாடுகள் அறிவிக்கப்பட்டு, மேற்படி பண்ணை உரிமையாளருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், எந்தவொரு கோழிப்பண்ணை அமைவதாக இருந்தாலும் முதலில் அதுதொடர்பாக பிரதேச சபையின் உபஅலுவலகத்திற்கு அறிவித்து, பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் சிபார்சைப் பெற்றே ஆரம்பிக்கவேண்டும். ஆனால் பலர் வருமானத்தைக் கருதி சுயலாப நோக்கத்துடன் எவ்வித அனுமதியும் இன்றி நடாத்தி வருபது கண்டறியப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம் பல தொற்றுநோய்கள் ஏற்படும் சாத்தியம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே இனிவரும் மழைகாலங்களில் இது எமது பிரதேசத்தில் பலவித பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதால், இது தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி-252)

# விசாரணைக் காலத்தை மட்டுப்படுத்தத் தீர்மானம்

(கொழும்பு)

சிவில்வழக்குகளை 3 வருட காலத்துக்குள் விசாரணை செய்து தீர்ப்பளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதம நீதியரசர் சரத்என் சில்வா தெரிவித்துள்ளார்.

சிவில் வழக்குகள் மீதான விசாரணைகள் முடிவடைய 3 முதல் 5 வருடங்கள் எடுப்பதனால், வழக்காளிகளும் எதிராளிகளும் பல்வேறு சிக்கல்களை எதிர் நோக்குவதுடன்,

சிலவேலைளகளில் வழக்காளியோ அன்றி எதிராளியோ தீர்ப்பு வழங்கப்படும் போது உயிருடன் இருப்பதில்லை.

இதனால், வழக்கு விசாரணைகளின் காலத்தை 3 வருடத்திற்கு மட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# இராணுவ ஆயுதக் களஞ்சியத்தில் திருட்டு

(கண்டி)

உக்குவலை இராணுவ முகாம் ஆயுதக் களஞ்சியஅறை உடைக்கப்பட்டு, அங்கிருந்த சில ஆயுதங்கள் களவாடப்பட்டுள்ளன.

இவ்வாயுதக் களஞ்சியத்தில் இருந்து ரி.56ரகத் துப்பாக்கிகள், கைக்குண்டுகள், ரவைகள் என்பனவே திருடப்பட்டுள்ளன.

எனினும், திருடப்பட்ட 24 மணி நேரத்தினுள் இராணுவப் பொலிஸார் இவற்றை மீட்டுள்ளனர்.

இவ்வாயுதக் களஞ்சியத்தில் திருட்டுப்போன சமயம், காவல் கடமையில் ஈடுபட்டிருந்த 3 இராணுவ வீரர்களும், 2பொலிஸாரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியல்ல் வைக்கப்பட்டுளளனர். (தி)

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்
—குறள்

# வலம்புரி

## மஹிந்தவின் நேர்மை

திருகோணமலையில் விடுதலைப் புலிகள் முகாம் அமைத்துள்ளதால் திருகோணமலைத் துறைமுகத்தின பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் குற்றச்சாட்டுக்கு எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ முடிவு கட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகள் முகாம்களை அமைத்து திருகோணமலையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளனர் என பொதுஜன ஐக்கிய முன்னணி மிகப்பெரும பிரசாரத்தை முன்னெடுத்திருநதது. இந்நிலையில், திருகோணமலையின் கள நிலைமையை ஆராயும் பொருட்டு எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலைக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது திருமலை கடற்படைத்தளபதிகள் மற்றும் உயர்அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் விடுதலைபுலிகளின் முகாம்கள் எதுவும் திருகோணமலையில் இல்லை என்ற உண்மை நிலையை வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவரான மஹிந்த ராஜபக்ஷ தான் கண்ட உண்மையை பகிரங்கப்படுத்தியதன் மூலம் தனது நேர்மையை வெளிப்படுத்தியுள்ளார். திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பிரதேசங்களை கடற்படையினர் மீட்காவிடில் திருமலைத்துறைமுகம் மற்றும் கடற படைத்தளம் ஆகியவற்றிற்கு ஆபத்து ஏற்படுமென அமெரிக்க இராணுவக் குழுவொனறு அண்மையில் அறிக்கை வெளியிட்டிருந்தது.

அவ்அறிக்கையை மையமாக வைத்து பொதுஜன ஐக்கிய முன்னணியும தனது பிரசாரததை முடுக்கியிருந்தது. இத்தகையதோர் சூழ்நிலையில் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் திருகோணம லைக்கு சென்ற எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளின் முகாம்கள் எதுவும் இல்லை என்ற சாரப்பட தனது கருத்தை வெளியிட்டுள்ளார். இது பொய்ப்பிரசாரம் செய்த பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு விழுந்த பலத்த அடியாகும்.

அதேவேளை அமெரிக்க .இராணுவத்தின் கபட நோக்கத்தையும் மஹிந்த ராஜபக்ஷவின் கருத்து வெளிப்படுத்தியுள்ளது.

திருகோணமலை விடுதலைப்புலிகளின் ஆக்கிரமிப்பிற்குள் இருப்பதான மாயத் தோற்றத்தைக் காட்டுவதன் மூலம் அமெரிக்கா தனது இராணுவ பலத்தை திருகோணமலைத் துறைமுகத்தின் மீது காலைப் பதிப்பதே நோக்கமாகும்.

இந்நோக்கத்தை மையமாக வைத்தே திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை கடற்படையினர் மீட்க வேண்டும் என்ற கருத்தை அமெரிக்க இராணுவ அதிகாரிகள் குழு விடுத்திருந்தது. எனினும் எதிர்க்கட்சித்தலைவரின் அறிவிப்பு கபட நோக்கங்களிற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளதெனலாம்.

# உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் பித்தப்பைக் கற்கள் பற்றி அறிவோம்

பித்தப்பை என்பது கல்லீரலில் உற்பத்தியாகும் பித்த நீரைக் குடலுக்கு எடுத்துச் செல்லும் பித்த நாளத்தில் ஒட்டியுள்ள சிறிய பை போனற உறுப்பு. இது கல்லீரலின் அடிப்பாகத்தில் அமைந்துள்ளது.

### பித்தப்பையின் செயற்பாடு

பித்தப்பையானது கல்லீரலில் இருந்து உற்பத்தியாகும் பித்தநீர் என்ற ஜீரண நீரை இரு வேளை உணவுக்கு இடையே சேமித்து வைக்கிறது. இந்த ஜீரண நீர் ஒரு நாளில் 600-700 மி.லீ.அளவுக்கு உற்பத்தியாகிறது.

பித்தபபையின் கொள்வனவு சுமார் 50 மி.ல.முதல் 60 மி.ல. நாம் உணவு உட்கொண்ட பிறகு இந்தப்பை சுருங்குவதால் இதில் சேகரிக்கப்பட்ட பித்த நீர் குடலைச் சென்றடைகிறது.

### பித்தப்பைக் கற்கள் என்றால் என்ன?

பித்தப்பைக் கற்கள் என்பது சிறு கற்கள் போன்ற ஒரு படிமானப் பொருள். இதை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**கொலஸ்டிரால் கற்கள்:**

உட்கொளளும் உணவில் கொழுப்புச்சத்து அதிகமாக இருந்தால், உடல பருமனாக உளளவர்களை, திடீரென்று உடல் இளைப்பவர்களை, கருத்தடை மாத்திரை அதிகம் உபயோகிப்பவர்களை இவ்வகைக கற்கள் அதிகம் பாதிக்கின்றன.

கொலஸ்டிரால் என்ற கொழுப்புப்பொருள் அதிகமாக உள்ளதால் இவ்வகைக் கற்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும்.

பெண்கள் இதனால் அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றனர். ஆங்கிலததில் இதை '5 எ.ப்' என்று கூறுவார்கள். பெண்கள், உடல் பருமனாக உள்ளவர்கள், வாயுத் தொல்லை உள்ளவர்கள், குழந்தைப் பேறுள்ளவர்கள், நாற்பது வயதைச் சேர்ந்தவர்கள்.

**பித்தச் சமயத்தில் இருந்து உருவாகும் பிக்மெண்ட் கற்கள்:**

இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் விரைவாக உடைவதாலோ பித்த நீர்ப்பையில் பக்டீரியா அல்லது குடல்புழுக்கள் சேர்வதாலோ இக்கற்கள் உடைகின்றன.

மூன்றாவது வகை கொலஸ்டிரால் மற்றும் பித்தச்சமயம் இரண்டும சேர்ந்தது.

பித்தப்பைக் கல்லுக்கும் நாம் உணவில் தவறுதலாக உட்கொள்ளும் கல்லுக்கும் சம்பந்தம் கிடையாது.

### பித்தப்பைக் கற்களின் அறிகுறிகள்

பித்தப்பைக் கற்கள் பல்வேறு வகைகளில் தொல்லை கொடுக்



கும். அதில் முக்கியமானவை வாயுத் தொல்லை, சாப்பிட்ட பிறகு வயிற்றின் மேல் பர்கத்தில் வலது புறம் வலி உண்டாதல், மஞ்சள காமாலை, மிகக் கடினமான வயிற்று வலி ஆகியன.

இப்பிரச்சினை உள்ளவர்கள் சரியான பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

## மருத்துவ விளக்கம்

ஏனெனில் குடல் புண் என்று நினைத்து நாள்பட மருந்து உட்கொண்டும் பலனில்லாது ஏதாவது பின் விளைவுகளோடு மருத்துவமனைக்கு வருவதுண்டு.

### பின்விளைவுகள்

பித்தப்பைக் கற்களால் பாதிக்கபபட்டுள்ள அனைவரும் தகுதிவாய்ந்த அறுவைச்சிகிச்சை நிபுணரிடம் சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

அவ்வாறு செய்யாவிட்டால் பித்தப்பை பித்த நாளத்தில் விழுந்து அடைத்துக்கொள்ளும்.

இதனால் மஞ்சள்காமாலை உணடாகவும் வாயப்புள்ளது. இன்னும் சிலருக்கு பான்கிரியாட்டிஸ் என்ற கணைய அழற்சி உண்டாகலாம்.

இது உண்டாகும்போது நோயாளிக்கு மிகக் கடினமான வலி உண்டாவதுடன், சிறுநீரகம், நுரையீரல் போன்ற உறுப்புகள் பாதிக்கும் வாய்ப்பு உள்ளது.

வேறு சிலக்கு நாள்பட்ட கற்களால் பித்தப்பையில் புற்றுநோய்க் கட்டிகள் உருவாகலாம்.

எனவே, எந்த ஒரு நோயாளிக்கு மயக்க மருந்தைத் தாங்கிக்கொள்ளும் சக்தி உள்ளதோ அவர் உடனடியாக சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் சக்கரை நோய் உள்ளவர்கள் உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் அவர்களுக்கு பித்தப்பை விரைவில் அழுகிவிட வாய்ப்பு உள்ளது.

### பித்தக் கற்களினால் ஏற்படும மஞ்சள்காமாலையை மருந்து, கீழா நெல்லி போன்ற மூலிகையால் சரிசெய்ய முடியாதா?

மஞ்சள் காமாலையை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதலாவது இரதத் கோளாறினால் வருவது. இரண்டாவது ஹெபடைடிஸ் என்ற கல்லீரல் சம்பந்தமான நோயால் ஏற்படுவது. மூன்றாவது பித்த நாளத்தில் ஏற்படும அடைப்பினால் உண்டாவது.

முதல், இரண்டாவது வகை மஞசள் காமாலையை மருந்து, மூலிகையினால் சரி செய்யலாம்.

மூன்றாவது வகையான பித்த நாள அடைப்புக்குக் காரணமான பித்தநாளக் கற்கள் அல்லது கட்டிகள் மற்றும் கணையக் கட்டிகளுக்கு எண்டாஸ்கோப்பி முறையோ அறுவைச் சிகிச்சையோ தேவைப்படுகிறது.

இதில் பித்தநாளக் கற்களை 100ல் 90பேருக்கு இ.ஆர்.சி.பி. என்னும் எண்டாஸ்கோப்பி முறையில் சரி செய்து விடமுடியும். மீதமுள்ள 10சதவீதத்தினருக்கு லேபராஸ்கோப்பி முறை தேவைப்படுகிறது.

### சிகிச்சை செய்யும் முறை

பிரெஞ்சு அறுவைச் சிகிச்சை நிபுணரால் அறிமுகப்படுத்தப்பட்ட லேபராஸ்கோப்பி அறுவைசிகிச்சை கடந்த 12ஆண்டுகளில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன்மூலம் வயிற்றைக் கிழிக்காமல் மிகச் சிறிய ஊசிபோன்ற துவாரங்கள் மூலம் மெல்லிய கருவிகள் மற்றும் மிகத் துல்லியமான காட்சியைத் தரும் கமரா ஆகியவற்றை உபயோகித்து சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

இந்தக் கமரா, கற்களை 20 மடங்கு பெரிதுபடுத்திக் காண்பித்தாலும், **Harmonic Scalpel** போன்ற நவீன கருவிகளை உபயோகிப்பதாலும ஒரு சொட்டு இரத்தம்கூட வீணாகாமல் இந்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.

நோயாளிக்கு இரத்தம் செலுத்த வேண்டிய அவசியமே இல்லை என்பதால் இரத்தத்தின் மூலம் பாவும் நோய்கள் வர வாய்பில்லை.

அறுவைச்சிகிச்சை முடிந்த சில மணி நேரத்திலேயே எப்போதும் போல உணவு உட்கொள்ள முடியும்.

தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மனிலே பராஸ்கோப்பி, மைக்ரோலேபராஸ்கோப்பி மற்றும் 3 நோயாளியின் உடலில் எந்தவித தையலோ, தழும்போ இருப்பதில்லை. வலி சிறிதளவும் உண்டாவதில்லை.

சிறுநீரகக் கற்கள்போல் அல்லாமல் பித்தப்பைக் கற்களுடன் பித்தப்பையும் அகற்றப்பட வேண்டியது அவசியம்.

ஏனெனில் பித்தப்பை சுருங்கி விரியாமல் கெட்டுப் போவதால்தான்

**டாக்டர் எஸ்.என்.சண்முகம்**

இவ்வாறு செய்யாமல் பழுதடைந்த பித்தப்பை (**Non Functioning of gall bladder**) உள்ளே இருப்பதால் உடல் நலத்துக்கு பல்வேறு கேடுகள் தான் விளையுமே அன்றி அதனால் பயன் ஏதுமில்லை.

எப்படி அப்பெண்டிக்ஸ் என்ற குடல்வாலை அகற்றுவதால் ஒருவருக்கு பாதிப்பு ஏற்படுவதில்லையோ அதுபோல பித்தப்பையை எடுப்பதாலும் எந்தப் பாதிப்பும் இல்லை.

பிறந்த குழந்தைக்குப் பித்தப்பைக் கற்கள் உண்டானாலும் அந்தப் பித்தப்பையை அகற்றி விடலாம்.

உணவுக் குழாயில் ஏற்படும் அடைப்பு (Achalasia Carida), உணவுக் குழாய் புற்றுநோய், இரப்பை நெஞ்சுக்குள் சென்றுவிடும் (Hiatus Hernia) நோய், அல்சர், ஒட்டுக் குடல், ஹெர்னியா, கல்லீரல், கணையம் ஆகியவற்றில் உண்டாகும் நீர்க் கட்டி, புற்றுநோய், வயிற்றில் உண்டாகும் நீர்க்கட்டி, கர்ப்பப்பை சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு இந்த முறையில் எளிதாக அறுவைச சிகிச்சை செய்யமுடியும். □

## யா/உஸ்மானியா கல்லூரியை மீளவும் திறக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் அழிந்து போன நிலையிலுள்ள யா/உஸ்மானியாக் கல்லூரியை மீண்டும் திறப்பதற்குரிய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு வருகின்றன.

சுமார்13 வருடங்களின் பின்னர் இக் கல்லூரியை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை கப்பற்துறை கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் விவகாரஅமைச்சர் ரவூப் ஹக்கீமின் இணைப்பாளர் மௌலவி சுப்யான், யாழ்.அரச அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில், இக்கல்லூரியை மீளத் திறப்பதற்குரிய முதற்கட்ட நடவடிக்கையாக நேற்றைய தினம் மேற்படிக் கல்லூரியின் அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாறக் தலைமையில் யாழ். முஸ்லிம் மக்கள் பணிமனையின் ஏற்பாட்டில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(18)

## திினசரி தியானம்

### கர்மவினை

கஷ்டங்கள், தொல்லைகள், நோய்கள் மற்றும் துயரங்கள் வரும்போது முணுமுணுக்காதீர்கள். வானில் கடந்து செல்லும் மேகங்கள் போன்றவை இவை. பழைய கர்ம வினைகள் விரைவில் வெளியேற்றப்படவேண்டும். பிரகிருதி அன்னை உங்களை இறைவனோடு சேர்க்க விரும்பு கின்றாள். ஆகவே இறைவனை அடைவதற்கான வேட்கை கொண்டுள்ள பக்தர்களே மிகவும் துன்பங்களையும் துயரங்களையும் பெறுவார்கள். அதேசமயம் இந்தச் சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்கான சகிப்புத்தன்மையைக் கருணைக்கடலான இறைவன் தருவார். அதன் பின்னர்தான் ஆன்மீக வாழ்க்கை ஆரம்பமாகும்.

**சுவாமி சிவானந்தர்**

## முஸ்லிம்கள்~புலிகள் மீண்டுமோர் சந்திப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும வடக்கு-கிழக்கு முஸ்லிம் சமாதானப் பேரவையின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக குழுவினஅனுசரணை எதுவுமின்றி இடம்பெற்ற இச் சந்திப்பு, இருதயபுரத்தில் உள்ள தமிழீழ விடுதலைப புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது காத்தான் குடி முஸ்லிம் மக்கள் வியாபாரம், விவசாயம் என்பவற்றில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படடுள்ளது.

விடுதலைப்புலிகளின் சார்பில், சிறப்புத் தளபதி ரமேஷ், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப பொறுப்பாளர் கௌசல்யன், நிதிப் பொறுப்பாளர் கு.கணேசன் ஆகியோரும் முஸ்லிம்களின் சார்பில் வடக்கு-கிழக்கு முஸ்லிம் சமாதானப் பேரவையின் தலைவர் சட்டத்தரணி அப்துல்ஜவஸ், செயலாளர் முகைதீன, காத்தானகுடி வர்த்தக சங்கத் தலைவர் கபூர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பை அடுத்து இம்மாதம் 27ஆம் திகதி காந்தான் குடி விவசாயிகளையும், வர்த்தகர்களையும் நேரில அழைத்துப் பேசி பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ)

## சண்டிலிப்பாய் பி.செ.பிரிவில் 50 அரை நிரந்தர வீடுகள் அமைக்க நடவடிக்கை

(கந்தரோடை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டிற்கு கீழ வாழும் 50 விதவைக் குடும்பங்களுக்கு ஜீ.ரி.சற். நிறுவனம் அரை நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்கவுள்ளது.

மேற்படி பிரிவில் உள்ள 5கிராம அலுவலர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சத்து 25ஆயிரம் ரூபா செலவில் இவ் அரைநிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதனடிப்படையில், மேற்படி வீட்டுத் திட்டத்திற்காக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உயரப்புலம், சண்டிலிப்பாய், மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் கிழக்கு மற்றும் பெரிய விளான் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் ச.செல்வராசா தெரிவித்துள்ளார்.

(உ-103)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலட்டி ஐக்கிய
விளையாட்டுக் கழகத்தின்
தலைவராகவும், யாழ்.
மாவட்ட கிராம
உத்தியோகத்தர் சங்க
உபதலைவராகவும், கிராம
சேவையாளராகவும்,(கரவெட்டி
பிரதேச செயலகம்) பணியாற்றி
வரும்

## திரு.கந்தன் பரஞ்சோதி

அவர்கள் கடந்த 01-09-2003 அன்று யாழ். மேலதிக மாவட்ட நீதிபதி திரு. B.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாக பதவிப் பிரமாணம் பெற்றதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதுடன், அவரின் பணி மேன்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

கலட்டி ஐ.வி.கழகம்
கரணவாய் கிழக்கு
கரவெட்டி

(C/6704)

ஸ்ரீவல்லிபுர

# ஆழ்வார் சுவாமி கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனம்-2003

## 24.09.2003 முதல் 10.10.2003 வரை

நிகழும் சுபானு வருடம் புரட்டாதி மாதம் ஏழாம் நாள் (24.09.2003) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொடியேற்ற வைபவம் நடைபெற எம்பெருமான் திருவருள் பாலித்துள்ளார். இதனைத் தொடர்ந்து பதினேழு தினங்கள் மஹோற்சவம் நடைபெறும். இவ்விஷேட தினங்களில் எம்பெருமானைத் தரிசித்து ஆனந்தமடைய அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| கொடியேற்றம் | -24.09.2003 புதன் முற்பகல் 10.00 மணி |
| சப்பரத் திருவிழா | -07.10.2003 செவ்வாய் இரவு 8.00 மணி |
| தேர்த் திருவிழா | -08.10.2003 புதன் காலை 8.00 மணி |
| சமுத்திரத் தீர்த்தம் | -09.10.2003 வியாழன் பிற்பகல் 2.00 மணி |
| கேணித் தீர்த்தம் | -10.10.2003 வெள்ளி முற்பகல் 10.00 மணி |


## அயர்லாந்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சர்வதேச நிதி நிறுவனத்தின் பிரதிநிதிகள் சந்தித்து உரையாடிய பின்பு தமிழ்ச்செல்வன் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் நேற்றுக் காலை 10.30 மணிக்கு இடம் பெற்ற இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் சு.ப.தமிழ்ச்செல்வன்,ஜோய் மகேஸ்வரன்,இரேனியஸ் செல்வின், தூயவன், ஜோர்ஜ் ஆகியோரும் சர்வதேச நிதி நிறுவனங்களின் சார்பில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா.அபிவிருத்தித்திட்டம், உலக நாணயநிதியம் என்பனவற்றின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சுமார் இரண்டு மணி நேரம் இடம் பெற்ற இச் சந்திப்பை அடுத்து அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் செய்தியாளர் மத்தியில் பேசும் போது மேலும் தெரிவித்திருப்பதாவது;

இன்றைய அரசியல் நிலை தொடர்பாக எமது தலைமைப் பீடத்தினதும், மக்களினதும் நிலைப்பாடுகள் சம்பந்தமாக உலக நிதி நிறுவனப் பிரதிநிதிகளுக்குத் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளோம். வடக்குக் கிழக்கில் சீர் குலைந்து போயுள்ள நிர்வாகக் கட்டமைப்புக்களைச் சீரமைத்து எமது மக்களினது வாழ்வாதார அடிப்படைத் தேவைகளைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்காலத்தில் திட்டங்களை எப்படி வகுக்க வேண்டும் என்றும் அதற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் அவசியம் பற்றியும் நிதிநிறுவ்னப் பிரதிநிதிகளுக்கு வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

### தேசியத் தலைவரின் வழி நடத்தலில் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்

தமிழர் தாயகப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய எந்தவொரு அபிவிருததித் திட்டமாக இருந்தாலும் அது தமிழ்மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அதிகாரமுள்ள நிர்வாகக் கட்டமைப்பு அலகினூடாகவே சாத்தியப்படும் என்பதையும் நாம் அவர்களிடம் தெளிவுபடுத்தியுள்ளோம்.

எமமால் முன்வைக்கப்பட்ட கோரிக் கைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். கடந்த 25 ஆண்டுகளாக தலைவர் வே.பிரபாகரனது வழிநடத்தலில் நம்பிக்கை கொண்டு எமது போராட்டத்திற்கு மக்கள் அனைவரும் முழு அளவில் ஆதரவு தந்தும பங்கெடுத்தும் உறுதிப்பாடான அரசியல் எதிர்காலத்தை வேண்டி நிற்கின்றார்கள் எனவே கடந்த கால அரசாங்கங்கள் சர்வதேசத்திடம் இருந்து பெற்ற நிதியை முழுக்க முழுக்க தமிழர் தாயகப் பிரதேசத்தை அழிப்பதற்கும் தமிழ் மக்களைக் கொல்வதற்குமாகவே பயன்படுத்தியுள்ளன. இது மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. இதனைச் சர்வதேசத்திற்கு உணர்த்த வேண்டியுள்ளது.

இந நிலையில் இனி வரும் காலங்களில் சர்வதேச சமூகம் தமிழர் தாயகத்திற்கும், தமிழ் மக்களுக்கும் செய்கின்ற உதவிகள் யாவும் தமிழ் மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் ஓர் உறுதிப்பாட்டை அளிக்கக் கூடிய வகையில் அமைய வேண்டுமாக இருந்தால், தமிழர் தாயகப் பிரதேசங்களில் அதிகாரமுள்ள இடைக்காலநிர்வாகக் கட்டமைப்பு அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளோம். இதனை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ம)

## புலிகள்...

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தாலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனாலும் யுத்தநிறுத்தவுடன்

# லெப். கேணல் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்திப் பவனி

(யாழ்ப்பாணம்)

லெப். கேணல் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி இன்று தென்மராட்சிப் பகுதி மக்களின் மலரஞ்சலிக்காக காலை 8 மணிக்கு வரணிச் சந்தையில் இருந்து ஆரம்பித்து பின்வரும் ஒழுங்கு முறையில் மக்கள் அஞ்சலிக்காக வரவுள்ளது.

வரணிச் சந்தை, வரணி மகா வித்தியாலயம், சுட்டிபுரம் அம்மன் கோவிலடி, எருவான் சந்தி, கொடிகாமம் துயிலும் இல்லம், கொடிகாமம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், கொடிகாமம் சந்தி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம்காவித்தியாலயம், கொடிகாமம் கச்சாய் வீதி தேவாலயம், கச்சாய் வாகையடிச் சந்தி, சீலன் பூங்கா, அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மீசாலை நாறசந்தி, லதினா தொலைத் தொடர்பகம், புத்தூர்ச் சந்தி, மீசாலைச் சந்தி, ஐயாகடைச் சந்தி, அரசடிச் சந்தி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி நகரம், சாவகச்சேரி பிரதேச செயலகம், நுணாவில் அமிர்தாம் பிகை பாடசாலை, நுணாவில் சந்தி, வைரவர் கோவிலடி, கைதடிச் சந்தி, நாவற்குழிச் சந்தி. இதேவேளை இன்று மாலை நல்லூர்க் கோட்டத்தினரிடம் ஊர்தி கையளிக்கப்படும்.

இதேவேளை வலிகாமம் கோட்டத்தில் இடம் பெறும் தியாக தீபம் திலீபனின் ஊர்தி சுன்னாகம் சந்தி, மல்லாகம் சந்தி, துர்க்கை அம்மன் கோவிலடி, மல்லாகம் சந்தி, ஏழாலை, குப்பிளான், வடக்கு புன்னாலைக் கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் சந்தி, மயிலங்காடு, கோட்டைக் காடு, மல்லாகம் சந்தி, அளவெட்டி வடக்கு, மாசியப்பிட்டி, தொட்டிலடி ஆகிய பகுதிகளூடாக இன்று பவனி வரவுள்ளது. (த)

## மாணவனைக் காணவில்லை

பாடசாலை மாணவன் ஒருவன் காணாமல் போயுள்ளதாக யாழ். மனிதவுரிமை ஆணைக் குழுவில் மாணவனது பெற்றோரால் முறையிடப்பட்டுள்ளது.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலத்தில் கல்வி பயிலும் மாணவனன கந்தரோடை மேற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னராசா சுமரஜித் (வயது-12) என்ற மாணவனே காணாமல் போயுள்ளார்.கடந்த 10ந்திகதி பிரஸ்தாப மாணவன் காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## ஸ்ரீ.சு.கட்சி...

சுதந்திரக்கட்சி,ஜே.வி.பி கூட்டமைப்புப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படக்கூடியதான சாத்தியக் கூறுகள் தென்படுவதாகவும் இக் கூட்டமைப்பு சாத்தியப்படுமானால் அடுத்துவரும் மாதங்களில் அரசியலில் பாரிய மாற்றத்தை எதிர்பார்க்கக் கூடியதாக இருக்குமெனவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)




# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும், வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.

(24.09.2003) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொடியேற்ற வைபவம் நடைபெற எம்பெருமான் திருவருள் பாலித்துள்ளார். இதனைத் தொடர்ந்து பதினேழு தினங்கள் மஹோற்சவம் நடைபெறும். இவ்விஷேட தினங்களில் எம்பெருமானைத் தரிசித்து ஆனந்தமடைய அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| கொடியேற்றம் | -24.09.2003 புதன் முற்பகல் 10.00 மணி |
| சப்பரத் திருவிழா | -07.10.2003 செவ்வாய் இரவு 8.00 மணி |
| தேர்த் திருவிழா | -08.10.2003 புதன் காலை 8.00 மணி |
| சமுத்திரத் தீர்த்தம் | -09.10.2003 வியாழன் பிற்பகல் 2.00 மணி |
| கேணித் தீர்த்தம் | -10.10.2003 வெள்ளி முற்பகல் 10.00 மணி |
| கொடியிறக்கம் | -10.10.2003 வெள்ளி மாலை 4.00 மணி |

**மஹோற்சவ கால பூசை நேரங்கள் (பஞ்சாங்க நேரம்)**

| காலை | | | மாலை | | |
|---|---|---|---|---|---|
| உசக்காலம் | 7.00 | மணி | சாயரட்சைப் பூசை | 3.30 | மணி |
| 2ஆம் காலம் | 8.00 | மணி | மாலைப் பூசை | 3.45 | மணி |
| அபிஷேகம் ஆரம்பம் | 9.00 | மணி | தம்பப்பூசை | 4.00 | மணி |
| விசேட பூசை | 9.30 | மணி | வசந்த மண்டபப் பூசை | 4.30 | மணி |
| தம்பப் பூசை | 10.00 | மணி | அர்த்தசாமப் பூசை | 7.00 | மணி |
| வசந்தமண்டபப் பூசை | 10.30 | மணி | | | |
| உச்சிக்காலம் | 12.00 | மணி | | | |

**முக்கிய குறிப்புகள்:**

1. பருத்தித்துறையிலிருந்து காலை 9.00 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் ஆலயத்திற்கு விசேட பஸ் சேவை நடைபெறும்.
2. பெண்களும் குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடியளவில் குறைத்துக் கொள்ளுங்கள்.
3. ஆலய உள்வீதியில் புகைப்படம், வீடியோ படம் எடுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.
4. உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் 20.09.2003 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஒதுக்கீடு செய்யப்படும் வாடகையில் அரைப்பங்கினை உடன் செலுத்த வேண்டும்.
5. சைவசமயப் பண்பாட்டுக்கு உரித்தான உடைகளை அணிந்துவருதல் விரும்பத்தக்கது.
6. பண்ணிசைப் போட்டி

| பிரிவு | தரம் | பாடல் |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 7 இற்கு கீழ் | தேவாரம், புராணம் |
| மத்திய பிரிவு | 8,10 | பஞ்சபுரர்ணம் |
| மேற்பிரிவு | 11,13 | பஞ்சபுராணம் |

எல்லாப்பிரிவினரும் நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் ஒருபாடல் பண்ணுடன் பாடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் பாடசாலை அதிபரின் உறுதி யுரைடன் அனுப்புதல் வேண்டும்.

**போட்டித் திகதி: 28.09.2003 நேரம் காலை 10.00 மணி**
**விண்ணப்ப முடிவு திகதி: 27.09.2003**

7. ஆலயத்தின் பெயரால் எவ்வித நிதிவசூலும் செய்ய தனிநபர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ அனுமதி அளிக்கப்படவில்லை. அன்பளிப்புச் செய்வோர் ஆலய கருமபீடத்தில் பதிவு செய்து பற்றுச்சீட்டு பெறுக.
8. மஹோற்சவத்தின் போது கடையைப் பெற்றவர்கள் அதற்குரிய பணத்தைச் செலுத்திய பின்னரே வியாபாரத்திற்கு அனுமதிக் கப்படுவர்.

-அறங்காவலர் சபை-

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்,
துன்னாலை வடக்கு, புலோலி.

[C/6705]

எப்பட்ட ஒரு அதிகாரமுள்ள நிர்வாகக் கட்டமைப்பு அலகினூடாகவே சாத்தியப்படும் என்பதையும் நாம் அவர்களிடம் தெளிவுபடுத்தியுள்ளோம்.

எமமால் முன்வைக்கப்பட்ட கோரிக் கைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். கடந்த 25

---

**புலிகள்...**

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தாலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனாலும் யுத்தநிறுத்தவுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, தற்போது சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும்,

நாட்டில் நிரந்தர அமைதி நிலவி வருகிறது எனக் கூறமுடியாது. இதனை வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்று வரும் படுகொலைச் சம்பவங்களும், மோதல்களும் எடுத்துக் காட்டுகின்றன.

அத்துடன், அரசின் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணான வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் மட்டும் 17 புதிய முகாம்களை அமைத்துள்ளனர்.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரியும்,எவ்விதபயனும் ஏற்படவில்லை.

சுதந்திரம் அடைந்ததன் பின்னர் இவ்வளவு மோசமான வீழ்ச்சி கண்ட யுகம் இலங்கையில் இது வரை இருக்க வில்லை. ஆனால் தற்போது இந் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எந்தவொரு அமைச்சரோ அன்றிப் பிரதமரே இல்லாமல் நாட்டை ஆட்சி செய்யக் கூடிய அதிகாரம் எனக்குண்டு.

இதுகால வரையும் ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் எதனையும் நான் பயன்படுத்தவில்லை.

நாட்டு மக்களினால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பைக் கொண்டு நடத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்பதாலேயே நான் எனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தவில்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனநாயகத்துக்கு எதிராக நான் செயற்படப் போவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்ற வில்லை எனவும் ஜனாதிபதி அங்கு குற்றம் சாட்டியுள்ளார். (தி-60)

வகையில் ஓர் உறுதிப்பாட்டை அளிக்கக் கூடிய வகையில் அமைய வேண்டுமாக இருந்தால், தமிழர் தாயகப் பிரதேசங்களில் அதிகாரமுள்ள

அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளோம். இதனை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ம)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும், வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்க உறுப்பினரும், கோப்பாய் தெற்கு அருள்மிகு ஞான வைரவர் ஆலய நிர்வாக சபை ஆலோசகரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய

## திரு. சுந்தரம் செல்வரத்தினம்

அவர்கள் 8.09.2003 அன்று மேலதிக யாழ்.மாவட்ட நீதிபதி திரு B. சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக பதவியேற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்

(7484)

யா/வியாவில் சைவ வித்தியாலயம்- காரைநகர்

## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி ~ 2003

காலம்: இன்று (2003.09.23) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00மணி (புதியநேரம்)

தலைவர்: திரு. ஆ. குமரேசமூர்த்தி - அதிபர்
இடம்: பாடசாலை மைதானம்
பிரதம விருந்தினர்: திரு. திருமதி வே. சாம்பசிவம் (பிரதேச செயலாளர்,பிரதேச செயலகம், காரைநகர்)
சிறப்பு விருந்தினர்: திரு. திருமதி வ. இராதாகிருஸ்ணன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்-பொது நிர்வாகம்,வலயக் கல்வித் திணைக்களம்,தீவகக் கல்வி வலயம்,வேலணை)
கௌரவ விருந்தினர்: திரு.வை.நமசிவாயம் (பழைய மாணவரும் பிரபல தொழிலதிபரும்)
பரிசில் வழங்குபவர்கள்: திருமதி விஜயலட்சுமி சாம்பசிவம்
திருமதி மஞ்சளா இராதாகிருஸ்ணன்

**தங்களை அன்புடன் அழைக்கின்றோம்**

அதிபர்,
ஆசிரியர், மாணவர்.

C/6706


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.